வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 10.03.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 91 | பக்கங்கள் : 16




## டிப்பர் மோதி முதியவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 10

சைக்கிளில் சென்ற முதி யவரை எதிரே வந்த டிப்பர் மோதி யதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்தார்.


இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை புத்தூர் - நிலாவரையில் இடம் பெற்றது. இதில், சிறுப் பிட்டி மேற்கை சேர்ந்த சுப்பையா இரத்தினசிங் கம் (வயது63) என்ப வரே உயிரிழந்தார்.

நிலாவரையிலி ருந்து சிறுப்பிட்டிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந் த வரை எதிரே வந்த

15

# ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதை இலங்கை உறுதிப்படுத்த வேண்டும்

## ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இணையனுசரணை நாடுகள் வலியுறுத்து



ஜெனிவா, மார்ச் 10

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதுடன் சட்டத்தின் ஆட்சியை இலங்கை உறுதிப்படுத்த வேண்டியது அவசியம். இதில், இலங்கை தொடர்பில் நம்பிக்கையை பேண உத்வும் தேர்தல் கட்டமைப்பும் உள்ளடங்கும்.

- இவ்வாறு ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை வழங்கும் நாடுகள் தெரிவித்துள்ளன.

15

## ரூபாயின் மதிப்பு சரியும்!

கொழும்பு, மார்ச் 10

அமெரிக்க டொல ருக்கு எதிராக குறிப்பி டத்தக்க வகையில் வலுவடைந்து வரும் ரூபாயின் மதிப்பு, இந்த ஆண்டு இறுதியில் மீண் டும் வலுவிழக் கும் என கணிக் கப்பட்டுள்ளது.

15

## 13ஆவது திருத்தம் ஊடாக ஒரே நாடு ஒன்பது மாகாணங்களாக பிரிந்தது!

### குற்றம்சாட்டுகிறார் சரத் வீரசேகர



கொழும்பு, மார்ச் 09

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தினு டாகவே, ஒரே நாடு 09 மாகாணங்களாக பிரிந்தது என்று பாராளுமன்ற உறுப் பினர் சரத் வீரசேகர தெரி வித்துள்ளார்.

டான் தொலைக் காட்சி செய்திப்பிரிவின் சகோதரமொழி பிரிவான யாழ்.தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட நேர் காணல் பகுதியிலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், "ஐக்கியமிக்க நாட்டுக் கும் ஒரே நாட்டுக்கும் இடையிலான வேறுபாடு கள் தெரியாதவர்களா கவே பலர் உள்ளனர்.

ஒரே நாடு என்று வரும் போது முழு நாட்டிலும் ஒரே நீதியே செயற்படுத் தப்படும்.

உதாரணமாக வடக்கு மாகாணத் தில் ஒரு யுவதியின்

15

## மக்களின் வாழ்வாதாரத்துக்கு அரசினால் மரண அச்சுறுத்தல்

### எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 10

தேர்தலை ஒத்திவைப் பதற்கான முயற்சி என் பது மக்களின் வாழ்வாதா ரத்துக்கு விடுக்கப்படும் மரண அச்சுறுத்தலாக அமையும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.

நேற்றைய பாராளு மன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், "அரசாங்கமானது உள்ளூராட்சிமன்ற தேர் தலை ஒத்திவைப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சி களினூடாக மக்களின் வாழ்வாதாரத்துக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

கீழ் மட்டத்திலுள்ள ஜனநாயகத்தை வெளிப் படுத்தும் நிறுவனங்க ளாகவே உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படு கின்றன.

மக்கள் பிரதிநிதித்துவ அரசியல் முறைமை, பிரதிநிதித்துவ அரசியல் முறைமை, அதனை பாது காப்பது எம் அனைவரின தும் கடமையாகும்.

இந்த சந்தர்ப்

15

## மீண்டும் உயர்நீதிமன்றத்தை நாடும் ஐக்கிய மக்கள் சக்தி!

கொழும்பு, மார்ச் 10

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு தேவையான நிதியை அரசாங்கம் வழங் காவிட்டால், நீதிமன்ற அவமதிப்பு தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியா னது, மீண்டும் உயர்நீதி மன்றத்தை நாடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினரு மான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள் ளார்.

நேற்றைய பாராளு மன்ற அமர்விலேயே அவர் இதனை தெரிவித் துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித் துள்ள அவர்,

15

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்க தலைவி கைது!

வவுனியா, மார்ச் 10

காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளின் சங்கத் தின் வவுனியா மாவட்ட தலைவி காசிப்பிள்ளை ஜெயவனிதா நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளுக்கு நீதி கோரி வவுனியாவில் 2 ஆயிரத்து 200 நாட்களுக் கும் மேலாக போராட் டம் நடத்தப்படுகின்றது. இந்தப் போராட்டம் நடைபெறும் கொட்ட கைக்கு சட்டவிரோத மாக மின்சாரத்தை பெற்றார் என்ற குற் றச்சாட்டிலேயே

15

## 15ஆம் திகதி ஆசிரியர்கள் வேலைநிறுத்த போராட்டம்!

கொழும்பு, மார்ச் 10

வரி அதிகரிப்பு, வாழ்க் கைச் செலவு அதிகரித்துள் ளமை உள்ளிட்ட பல வேறு காரணிகளை அடிப் படையாகக் கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதி - புதன்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத் தப் போராட்டத்தில் சகல ஆசிரியர்களும் ஈடு படவுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங் கம் அறிவித்துள்ளது.

குறிப்பாக, சம்பள பிரச்னை, உயர்தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் உள்ளிட்டவை தொடர்பில்

15

## தொழில்சங்க போராட்டம் மக்கள் பெரும் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 10

நாடு தழுவிய ரீதியில் நேற்று 40 தொழில் சங் கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம் பித்தன. இதனால், நேற் றைய தினம் பல சேவை கள் பாதிக்கப்பட்டன.

குறிப்பாக, சுகாதார, கல்வி சேவைகள் பாதிக்கப்பட் டன. சில சேவைகள் மிக வும் மந்த கதியிலேயே இடம்பெற்றன.

இதேநேரம், தொழில் சங்கப் போராட்டத்தால் அத்தியாவசிய சேவை களும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக் கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள் கைக்கு எதிர்ப்பு

15

## புதிய பயணத்துக்கு தலைமைதாங்க தயார்!

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



கொழும்பு, மார்ச் 10

நாட்டைக் கட்டி யெழுப்புவதற்கான புதிய பயணத்தில் அனைவரை யும் கட்சி, இன, மத பேத மின்றி ஒன்றிணையுமாறு அழைப்பு விடுகின்றோம். அந்த பயணத்துக்கு வழி காட்டவும், தலைமைத் துவத்தை வழங்கி ஆலோசனைகளை வழங்குவதற்கு

15

## போர் குற்றவாளியின் பங்கேற்பை தடை செய்க!

### மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை

ஜெனிவா, மார்ச் 10

ஐ. நா. மனித உரிமை கள் பேரவையின் சர்வ தேச மனித உரிமைகள் தொடர்பான 6ஆவது மீளாய்வு கூட்டம் நடக் கிறது. இதில், இலங்கை சார்பில் போர் குற்றம் சாட்டப்பட்ட மேஜர் ஜெனரல் ஜீவக ருவான் குலதுங்க பங்கேற்றுள் ளார். அவரின் பங் கேற்பை தடை செய்ய வேண்டும் என்று இனப் படுகொலை தடுப்பு மற்றும் வழக்கு விசார ணைகளுக்கான சர்வதேச மையம் (ஐ. சி. பி. பி. ஜி.) கோரிக்கை விடுத்துள்ளது.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

மீண்டும் ஒரு தடவை உள்ளூராட்சி தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தேர்தலுக்காக இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை வழங்கவேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, தேர்தலை நடத்துவதற்கான வேலைகளை தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் தொடக்கியது.

கடந்த ஏழாம் திகதி நிதி அமைச்சின் செயலாளரை தேர்தல் ஆணைக்குழு அழைத்திருந்த போதிலும் அவர் அன்றைய சந்திப்புக்கு செல்லவில்லை. ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாக ஏதேனும் உறுதிமொழியை அவர் வழங்கினாரெனவும் செய்திகள் எதுவும் வெளிவந்ததாகவும் தெரியவில்லை.

ஆனாலும் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் இருபத்தி ஐந்தாம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்திருக்கிறார்.

ஏற்கனவே, தேர்தல் ஆணைக்குழு தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ச்சியாக ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்து வருகின்றார்.

தேர்தல் நடத்தும் முடிவை தேர்தல் ஆணைக்குழு ஒருமித்து எடுக்கவில்லை என்றும் ஆணைக்குழு உறுப்பினர்கள் சிலர் தேர்தல் நடத்தும் முடிவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கின்றனர் எனவும் ஜனாதிபதி தொடர்ந்து கருத்துத் தெரிவித்து வருகின்றபோதிலும் தேர்தல் ஆணைக்குழு அதனை நிராகரிக்கின்ற வகையில் அனைத்து உறுப்பினர்களுடன் ஊடகங்களை சந்தித்ததாகவோ அல்லது அனைவரும் இணைந்து அறிவிப்பு வெளியிட்டதாகவோ தெரியவில்லை.

தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவு வழங்கியபோதிலும் அதுகுறித்த காலக்கெடு எதனையும் விடுத்ததாகவும் தெரியவில்லை.

இந்நிலையில், நிதி அமைச்சின் செயலாளர் அது குறித்து உத்தரவாதம் எதனையும் வழங்காத நிலையிலேயே ஆணையாளர் தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரும் ஓர் ஆண்டுக்கு பின்னரே நாட்டில் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மீண்டும் அறிவிப்பை செய்திருப்பதையும் கவனிக்கவேண்டும்.

தேர்தல்கள் ஆணைக்குழு இவ்வாறு தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டு தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்ற அதேவேளையில், அரச தரப்போ தேர்தல் நடக்காது என்ற தோரணையில் காரியங்களை செய்துவருவதையும் கவனிக்கமுடிகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த செவ்வாயன்று நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட அரச அச்சகத்தின் பிரதானியோ, வாக்குச்சீட்டுக்களை அச்சிட தேவையான நிதியைக் கோரி திறைசேரிக்கு தன்னை தொடர்புகொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டாரெனவும் தெரிவித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

அதாவது, அச்சிடுவதற்கு தேவையான நிதியை திறைசேரியிடமிருந்து தாம் பெற்று அச்சகத்துக்குக் கொடுக்காமல், அவர்களையே திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சம்பளமற்ற விடுமுறையை எடுத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள அரச உத்தியோகத்தர்கள் தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால், தமது சம்பளத்தை பெறுவதற்கோ அல்லது மீண்டும் கடமைக்கு செல்வதற்கோ முடியாத நிலைமை மற்றுமொரு சிக்கலை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு தேர்தல் ஒத்திவைக்கப்படும் பட்சத்தில் அநீதி இழைக்கப்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை சரியான நேரத்தில் நடத்த முடியாவிட்டால், உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் எந்தவோர் அரசாங்க ஊழியர்களுக்கும் அசௌகரியம் ஏற்படாத வகையில், நிறுவனங்களின் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் துறைக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர பாராளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

அதாவது ஜனாதிபதியும் அமைச்சர்களும் தேர்தல் நடைபெறாது என்று கூறிக்கொண்டிருக்க, தேர்தல்கள் ஆணைக்குழு தலைவரோ தேர்தலுக்கான அறிவிப்பை செய்துவிட்டு தேர்தல் வேலைகளை கவனிக்கத் தொடங்கிவிட்டார்.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டபோதிலும் இன்னமும் வேட்பாளர்களுக்கு அந்த நம்பிக்கை ஏற்படவில்லை என்றே தெரிகின்றது. அதனால் தான் அவர்கள் யாரும் தேர்தல் பரப்புரைக்கு தயாராகவில்லையோ?

**- ஊர்க்குருவி**

# வடக்கின் பெரும் போர்; மத்திய கல்லூரி அபாரம்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

வடக்கின் பெரும்போர் பெருந்துடுப்பாட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 279 ஓட்டங்களை குவித்துள்ளது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் சென். ஜோன்ஸ் கல்லூரி 3 விக்கெட்கள் இழப்புக்கு 43 ஓட்டங்களுடன் தடுமாறி வருகிறது.

வடக்கின் பெரும்போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதும் பெருந்துடுப்பாட்ட போட்டி நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

116ஆவது ஆண்டாக நடக்கும் இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற சென். ஜோன்ஸ் கல்லூரியின் அணித் தலைவர் சபேசன் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

மத்திய கல்லூரிக்கு விதுசன், சிமில்ரன் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். இவர்களின் இணைப்பு நீண்ட நேரம் நீடிக்கவில்லை. சிமில்ரன் 7 ஓட்டங்களுடன் யோ. விதுசனின் பந்துவீச்சில் கிந்துசனிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த சஞ்சயன் விதுசனுடன் இணைந்து நிதானம் காட்டினார். இந்த நிலையில், விதுசன் தனது துடுப்பாட்டத்தை சற்று வேகப்படுத்தினார். அரைச்சதம் கடந்து அபாரமாக ஆடிய விதுசன் 6 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 102 பந்துகளில் 71 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

சஞ்சயனுடன் இணைந்த போல் பிறேமதயாளன் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த அஜய் நிதானம் காட்டினார். இதனிடையே, 6 பௌண்ட்ரிகளுடன் 84 பந்துகளில் 42 ஓட்டங்களை சேர்த்த சஞ்சயன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த நியூட்டன் 0, அணித் தலைவர் கஜன் 5, சயந்தன் 11, அபிலாஷ் 15, அனுசாந்த் 27 என வேகமாக விக்கெட்களை பறிகொடுத்தனர்.

மறுமுனையில் நிலைத்து அபாரமாக ஆடிய அஜய் 77 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள் 2 சிக்ஸர்களுடன் 74 ஓட்டங்களை குவித்து இறுதி விக்கெட்டாக ஆட்டமிழந்தார்.

66.2 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் பந்துவீச்சில் விதுசன் 4 விக்கெட்களையும் அபிசேக் 3 விக்கெட்களையும் கஜகர்ணன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸை தொடங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு நேசகுமார் ஜெஷீல், அண்டர்சன் சச்சின் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். சச்சின் 6 ஓட்டங்களுடன் வெளியேறவே, அடுத்த வந்த கிந்துசன் ஒரு பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 11 ஓட்டங்களை விளாசிவிட்டு ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஜனத்தன் ஓட்டம் எதுவும் பெறாமலேயே வெளியேறினார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் 17 ஓவர்களை சந்தித்த சென். ஜோன்ஸ் கல்லூரி 3 விக்கெட்கள் இழப்புக்கு 43 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஜெசீல் 16 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் சபேசன் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரியின் பந்துவீச்சில் அனுசாந்த் 2 விக்கெட்களையும் நியூட்டன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாவது நாளாகும். (ஐ)











படங்கள் : ஐ.சிவசாந்தன்

ஈழநாடு
Eelanadu
10.03.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# இந்திய உதவி?

இலங்கையின் மீளெழுச்சிக்கும் உறுதிப்பாட்டுக்கும் இந்தியாவே சிறந்த பங்காளியாக இருப்பதாகவும் இந்தியா உதவியது போன்று வேறு எந்தவொரு நாடும் உதவவில்லை என்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்திருக்கின்றார். இந்தியாவின் காலப்பொருத்தம் கருதிய உதவி தொடர்பில் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மிலிந்த மொறகொடவும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கின்றனர்.

இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருந்த சூழலில் இந்தியா எவ்வித நிபந்தனையும் இல்லாமல் உதவியது. 255 நாட்களுக்குள் 3.9 பில்லியன் டொலர்களை வழங்கியது. உண்மையில் இவ்வாறானதொரு பெரும் உதவியை இந்தியா செய்யாதிருந்திருந்தால் இலங்கையின் நெருக்கடி கட்டுப்பாட்டை இழந்திருக்கும். பஞ்சத்தால் மக்கள் பெருந்தொகையினர் இறக்க நேர்ந்திருக்கும்.

வரலாற்று ரீதியாக இந்தியா எப்போதும் இலங்கையின் ஒருமைப்பாட்டையும் அரசியல் உறுதிப்பாட்டையும் பாதுகாப்பதில் உறுதுணையாகவே இருந்திருக்கின்றது. அதேவேளை, தமிழ் மக்களின் நியாயமான அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதிலும் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்திருக்கின்றது.

ஆனால் மறுபுறம், கொழும்போ இந்தியாவுக்கு முழுமையான விசுவாசத்தை காண்பித்த வரலாறில்லை. இந்தியா - பாகிஸ்தான் யுத்தத்தின்போது இந்திய கரிசனைகளை மீறி பாகிஸ்தான் விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதியளித்தது. அதேபோன்று, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கரிசனைகளை மீறி சீனாவுடன் தேனிலவில் ஈடுபட்டது. சீன நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதியளித்தது.

இந்தியாவின் உடனடி அயல்நாடொன்றில் சீனா நிரந்தரமாக முகாமிடும் வகையில் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த அம்பாந்தோட்டை துறைமுகத்தை ரணில் அரசாங்கம் 99 வருட குத்தகைக்கு வழங்கியது. தேசிய சொத்தொன்றை 99 வருட குத்தகைக்கு வழங்குவதென்பது உண்மையில் அந்த சொத்தை விற்பதற்கு சமமானது. ஏனெனில், 99 வருடங்களில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் எதுவும் நிகழலாம். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதைத் தொடர்ந்து அம்பாந்தோட்டை துறைமுகத்தின் குத்தகை காலத்தை குறைக்கப்போவதாகக் கூறினார். இறுதியில் இந்தியாவுடன் செய்துகொண்ட கிழக்கு கொள்கலன் முனையத்துக்கான உடன்பாட்டை இரத்துச் செய்து இந்தியாவின் முதுகில் குத்தும் வேலையை செய்தார்.

வரலாற்று ரீதியாக நோக்கினால் இந்தியா கொழும்புக்கு முழுமையான ஆதரவை வழங்கிய போதிலும்கூட, கொழும்பின் அணுகுமுறை காதலும் விரோதமும் போன்றதான அணுகுமுறையிலேயே இதுவரையில் இருந்து வந்திருக்கின்றது. இந்தியாவை அச்சத்தோடு நோக்கும் போக்கொன்று சிங்கள - பௌத்த தேசியவாதிகள் மத்தியில் ஆழமாக வேரூன்றியிருக்கின்றது. நெருக்கடி ஏற்படும்போது இந்தியாவின் தயவை நாடுவதும் ஆனால், நெருக்கடி தீர்ந்ததும் நடுநிலைக் கொள்கையென்று கூறிக்கொண்டு - இந்தியாவுக்கு எதிரான சக்திகளுடன் நெருங்கிய உறவைப் பேணுவதும் வழமையானது. பாகிஸ்தான் இந்தியாவின் வரலாற்று எதிரி - ஆனால், அதனைக்கூட உற்ற நண்பனென்று கூறுமளவுக்கே கொழும்பின் அணுகுமுறை இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் விடயத்தில் இந்தியாவின் ஆதரவைப் போற்றும் சிங்கள ஆளும் தரப்பு - மறுபுறம், தமிழ் மக்களின் பிரச்னையென்று வருகின்றபோது அதனை நாட்டின் உள்விவகாரமென்று கூறி இந்தியாவின் ஆலோசனைகளைப் புறம்தள்ளவே முற்படுகின்றது. தமிழர் பக்கத்திலும் இந்தியாவின் கரிசனைகளை சரியாகப் புரிந்துகொண்டு செயல்பட்ட சந்தர்ப்பங்கள் அரிதானது. இந்தியாவுடன் நேரடியாக மோதுவதிலிருந்து பிரேமதாஸ - புலிகள் உடன்பாடு வரையில் இந்தியாவுக்கு சங்கடமான விடயங்களே நடந்திருக்கின்றன. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மாகாண சபை தேர்தலில் போட்டியிட்ட சந்தர்ப்பம் ஒன்றைதவிர இந்தியாவின் கரிசனைகளை - தேவைகளை, புரிந்துகொண்டு செயல்பட்ட சந்தர்ப்பங்கள் வேறில்லை.

# இலங்கையர்களுக்கு இத்தாலியில் தொழில்

*கொழும்பு, மார்ச் 10*

ஐரோப்பிய ஒன்றியம் அல்லாத நாடுகள் மற்றும் இலங்கை என்பவற்றின் பணியாளர்களை இத்தாலியில் தொழில் வாய்ப்புகளுக்காக இணைத்து கொள்வதற்காக எதிர்வரும் 27ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள கோரப்படவுள்ளன.

இணையத்தளம் ஊடாக இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 87,702 தொழிலுக்கான வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

பாரவூர்தி சாரதிகள், கட்டுமான தொழில்துறையினர், உணவக துறை, மின்சாரத்துறை மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட துறைகளில் தொழில்வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நெற்செய்கைக்கான உரத்துடன் 17ஆம் திகதி வருகின்றது கப்பல்

*கொழும்பு, மார்ச் 10*

நெற்செய்கைக்கு அவசியமான ட்றிப்பல் சுப்பர் பொசுப்பேற்று உரத்துடனான கப்பல் எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 36,000 மெற்றிக் தொன் அடங்கிய ட்றிப்பல் சுப்பர் பொசுப்பேற்று அடங்கிய உரக்கப்பல் வருகைத்தரவுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவி திட்டத்தின் கீழ் குறித்த உரத் தொகை கிடைக்கப்பெறவுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொட்டாசியம் மற்றும் பொசுபரஸ் குறைப்பாட்டினால் நெற்கதிர்கள் மஞ்சல் நிற நோய்க்குட்படுவதை ட்றிப்பல் சுப்பர் பொசுப்பேற்று உரத்தை பயன்படுத்துவது வாயிலாக தடுக்க முடியும் என விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பால் சேகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

*கொழும்பு, மார்ச் 10*

பால் சேகரிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தப்படுகின்ற நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் சூரிய ஒளியில் அதற்கான தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான இடங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,

"வருடாந்தம் 40 மில்லியன் லீற்றருக்கும் அதிகமான பால் உற்பத்தி இடம்பெறும் மாவட்டங்களாக நுவரெலியா, குருணாகல், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன.

அதேபோன்று யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை, பதுளை, கம்பஹா, பொலனறுவை, அம்பாறை, புத்தளம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் வருடாந்த பால் உற்பத்தி 15 மில்லியன் லீற்றரிலிருந்து - 40 மில்லியன் லீற்றர் வரை காணப்படுகின்றது. கடந்த 2021 ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் 60.1 மில்லியன் லீற்றர் பால் நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 50.64 மில்லியன் லீற்றரும் அனுராதபுரம் மாவட்டத்தில் 47 மில்லியன் லீற்றரும் யாழ்ப்பாணத்தில் 22 லீற்றர் மில்லியனும் பதுளை மாவட்டத்தில் 19.22 மில்லியன் லீற்றரும் பால் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டது"-என்றார். (அ-கே)

# பெரும் தொகை தொலைக்காட்சிகள், குளிரூட்டிகள் சுங்கத்தினால் பறிமுதல்!

*கொழும்பு, மார்ச் 10*

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவான தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகளை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் எனக் கூறி இந்த பொருட்கள் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை சுங்க மத்திய சரக்கு ஆய்வுப் பிரிவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதில் 68 தொலைக்காட்சிப் பெட்டிகள், 77 குளிரூட்டிகள், பயன்படுத்தப்பட்ட ரயர்கள் உள்ளிட்ட உபகரணங்கள் இருந்ததாக பிரதி சுங்கப் பணிப்பாளர் ஆர்.எஸ்.வீரசிறி தெரிவித்தார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 10 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 26
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திருதியை



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
வழக்கு சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**இடபம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**மிதுனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னைகள் தீரும். தடைகள் தாண்டி வெல்லும் நாள்.

**கடகம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். அழகும் இளமையும் கூடும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வரும். உங்களைப் பற்றி சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள்.

**துலாம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருட்சிகம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். நலம் தரும் சிறப்பான நாள்.

**தனுசு**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை உருவாகும். நேர்மறை சிந்தனைகள் பிறக்கும். மனநிறைவு கிட்டும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப்பாக போய் முடியும். குடும்பத்தில் உள்ளவர்கள்யாரும் தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மீனம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். சவாலான வேலைகளையும் சர்வ சாதாரணமாக செய்து முடிப்பீர்கள். நன்மை பல நடக்கும் நாள்.

# தமிழக அமைச்சர்களின் ஊழல் பட்டியல் ஏப்ரல் 14 வெளியாகும்!

## பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, மார்ச் 10

தமிழக அமைச்சர்களின் ஊழல் பட்டியல் வருகிற ஏப்ரல் 14ஆம் திகதி இணையதளத்தில் வெளியிடப்படும் என்று பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு தி. மு. க. அமைச்சர் செந்தில் பாலாஜி அண்ணாமலை கையில் கட்டியிருக்கும் கடிகாரம் பற்றி கேள்வி எழுப்பி அதன் விலை பற்றியும் கேட்டிருந்தார். இதற்கு பதிலளித்த



அண்ணாமலை, கடிகாரத்தின் பற்றுச்சீட்டு மற்றும் தனது சொத்து மதிப்போடு, தி. மு. க. அமைச்சர்கள் செய்த ஊழல்கள் ஏப்ரல் 14ஆம் திகதி அதிகார பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும் என்று தெரிவித்திருந்தார்.

மேலும், சொத்து பட்டியல் மற்றும் அதன் இருப்பிடம் ஆதாரமாக வெளியிடப்படும். அத்துடன், மென்தரவாக ஊடகங்களுக்கும் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு அமைச்சர் உதயநிதி பா. ஜ. கவை '420' (மோசடி) கட்சி என்று கூறியிருந்த நிலையில் அண்ணாமலை தற்போது இந்த அறிவிப்பை மீண்டும் வெளியிட்டிருக்கிறார். (ஐ)

# அ. தி. மு. க. - பா. ஜ. க. கூட்டணி தொடர்கிறது

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை, மார்ச் 10

தமிழ்நாட்டில் அ. தி. மு. க. தலைமையிலான பா. ஜ. க. கூட்டணி தொடர்கிறது என்று அ. தி. மு. க. கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ. தி. மு. க. தலைமை பணிமனையில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்தும், அ. தி. மு. க. - பா. ஜ. கவினரிடையே ஏற்பட்டுள்ள பிரச்னை குறித்துப் பேசிய அவர் எடப்பாடி பழனிசாமியின் உருவப் படத்தை எரிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. இது போன்ற செயல்களை ஊக்கப்படுத்தாமல், சம்மந்தப் பட்டவர்கள் மீது பா. ஜ. க. நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அ. தி. மு. க. தலைமையிலான பா. ஜ. க. கூட்டணி தொடர்கிறது எனக் கூறிய ஜெயக்குமார், ஓ. பி. எஸ். குறித்த கேள்விகளுக்கும் பதிலளித்து பேசினார்.

அப்போது ஓ. பன்னீர்செல்வம் கட்சி நடத்தவில்லை, கடை நடத்தி வருகிறார். அங்குள்ள 99 சதவிகிதம் பேர் அ. தி. மு. கவுக்கு ஆதரவாக உள்ளனர். அதிமுக பொதுச்செயலாளர் தேர்தல் நடத்துவது குறித்து கட்சி தலைமை உரிய நேரத்தில் அறிவிக்கும் - எனறார். (ஐ)

# கடலூர் மாவட்டத்தில் நாளை முழு அடைப்பு

## பாட்டாளி மக்கள் கட்சி அழைப்பு

கடலூர், மார்ச் 10

மக்கள் எதிர்ப்பையும் மீறி நிலங்களை சமன் செய்யும் என். எல். சி. மற்றும் தமிழ்நாடு அரசின் அடக்கு முறையை கண்டித்து கடலூர் மாவட்டத்தில் நாளை வெள்ளிக்கிழமை பா. ம. க. சார்பில் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்கள் நலனை விட என்.எல்.சி நிறுவனத்தின் வணிக நலனே முக்கியம் என்பதை தமிழ்நாடு அரசும், கடலூர் மாவட்ட நிர்வாகமும் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கின்றன. கடலூர் மாவட்டம் வளையமாதேவி பகுதியில் பொதுமக்களை சிறைப்படுத்திவிட்டு, பொலிஸாரை குவித்து, கையகப்படுத்தப்பட்ட நிலங்களை சமன்படுத்தும் பணியில் என். எல். சி. நிர்வாகம் ஈடுபட்டிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது.

கடலூர் மாவட்டத்தையும், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் சுற்றுச்சூழலையும் பாழ்படுத்தி வரும் என். எல். சி. நிர்வாகத்துக்கு நிலம் கையகப்படுத்தித் தரும் முகவராக தமிழ்நாடு அரசும், கடலூர் மாவட்ட நிர்வாகமும் செயல்பட்டு வருகின்றன. மக்களைக் காப்பதுதான் அரசின் முதற்கடமை என்பதை மறந்துவிட்டு, என்.எல்.சி நிறுவனத்தின் கையசைவுக்கு ஏற்றவாறு தமிழக அரசு செயல்படுவதை பாமக கடுமையாக கண்டித்து வருகிறது.

என். எல். சி. நிறுவனத்தை கடலூர் மாவட்டத்திலிருந்து வெளியேற்றி, உழவர்களைக் காக்கும் வரை பா. ம. கவின் போராட்டம் தொடரும். உழவர்களின் நிலங்களை சமன்படுத்தி கட்டுப்பாட்டில் எடுக்கும் என். எல். சி மற்றும் தமிழ்நாடு அரசைக் கண்டித்து பா. ம. க. சார்பில் நாளை கடலூர் மாவட்டத்தில் முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படும் - என்றுள்ளது. (ஐ)

# ஆளுநர்களுக்கு வாய் மட்டுமே காதுகள் இல்லை எனதோன்றுகிறது!

## முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, மார்ச் 10

ஆளுநர்களின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது அவர்களுக்கு வாய் மட்டும்தான் உண்டு; காதுகள் இல்லை என்றே தோன்றுகிறது என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

அவரின் கட்சித் தொண்டர் ஒருவர் அவரிடம் "ஆளுநர்கள் அரசியலில் தலையிடக் கூடாது என்று அண்மையில் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தெரிவித்துள்ளதே... ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஆளுநர்கள் இதற்கு செவிமடுப்பார்கள் என நினைக்கிறீர்களா?", என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த ஸ்டாலின், "இதுவரையிலான செயல்



பாடுகளைப் பார்த்தால், ஆளுநர்களுக்கு வாய் மட்டும்தான் உண்டு; காதுகள் இல்லை என்றே தோன்றுகிறது.", என்றார். (ஐ)

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும்

## டலஸ் அழகப்பெரும வலியுறுத்து



**கொழும்பு, மார்ச் 10**

**நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.**

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு இனியும் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் தான் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு இப்போது ரணில் விக்கிரமசிங்க செய்வதைப் பாருங்கள்.

தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை அறிவிக்கின்றார். ரணில் இல்லை என்கிறார். அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே ரணில் இவ்வாறு செய்கின்றார்.

இந்த நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டுக்குச் செய்த அநியாயம் அதிகம். நான் ஜனாதிபதியாகி இருந்தால் இறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி நானாகத்தான் இருந்திருப்பேன்.

1994 இல் இருந்து போட்டியிட்ட எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களும் முதலில் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்பதுதான். ஆனால், எந்த ஜனாதிபதியும் அதைச் செய்ததில்லை.

நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்த அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

ரணில், மகிந்த, மைத்திரி, சந்திரிகா இப்படி எல்லோருக்கும் சொல்கின்றேன். மீண்டும் ஜனாதிபதியாவதற்கு முயற்சிக்க வேண்டாம்.

அடுத்த தலைமுறையிடம் நாட்டை ஒப்படைப்போம். இப்போது நாட்டுக்குத் தேவை புதிய முறைமையாகும்-என்றார். (அ)

# சஜித்தும் ரணிலும் இணைய வேண்டும்

## மயந்த திஸாநாயக்க கோரிக்கை



கொழும்பு, மார்ச் 10

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் மீண்டும் ஒன்றிணைய வேண்டும் என்பதே எனது கனவு." -என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

"ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி என பார்த்துக் கொண்டிருப்பதைவிடவும் நாட்டுக்காக சேவை செய்யக்கூடிய நேரமே இது. அதனால்தான் பொது இணக்கப்பாட்டுடன் நிதி பற்றிய குழுவின் தலைமைப் பதவியை ஏற்க தீர்மானித்தேன்.

ஹர்ஷ டி சில்வாவுக்கு தலைமைப் பதவி கிடைக்காது என்பது எனக்கு தெரியும். அதனால் தான் நான் ஏற்றேன். இன்று பதவி விலகிவிட்டேன். ஆனால் ஆளுங்கட்சி எம்.பியொருவர் தலைவராகச் செயற்படும் நிலை உருவாகியுள்ளது.

எனக்கு கட்சி மாறும் எண்ணம் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் இணைய வேண்டும் என்பதே எனது கனவு.

தப்பித் தவறியேனும் ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் நாட்டுக்கு ஆபத்து. எனவேதான் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணையவேண்டும் எனக் கூறுகின்றேன்." -எனவும் மயந்த திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# அதிக புகை வெளியேற்றும் வாகனங்களுக்கு ஆபத்து!

கொழும்பு, மார்ச் 10

அதிக புகையை வெளியேற்றும் வாகனங்கள் குறித்து பொது மக்களுக்கு தகவல் வழங்குமாறு மோட்டார் போக்குவரத்துத் துறையின் காற்று மாசு பிரிவு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, 070 350 0525 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு அறிவிக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தனியார் பஸ்கள் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள், அரச வாகனங்கள் மற்றும் பொலிஸ் வாகனங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாதத்தின் இறுதி வாரத்தில் கொழும்பு பஸ்டியன் மாவத்தையில் தனியார் பஸ்களுக்கு புகை பரிசோதனை செய்யப்படுவதாகவும், கடந்த மாதச் சோதனையில் 40 வீதத்துக்கும் அதிகமான பஸ்கள் புகைப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# "தேர்தலைப் பிற்போட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்"

கொழும்பு, மார்ச் 10

மக்களின் உரிமைகளை மீறும் வகையில் தேர்தல் பிற்போடப்பட்டால், அதற்கெதிராக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன் மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி விஜித நாணயக்கார கண்டியில் வைத்து இதனை தெரிவித்தார்.

தேர்தல் என்பது மக்களுக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமையாகும். அதனை எந்த வகையில் இல் லாது செய்யப்படுவதை அனுமதிக்க முடியாது என்றார். (அ)

# ரூபா 1 லட்சத்துக்கு மேல் சம்பளமும் சலுகைகளும் பெறுபவர்களே வரிக்கு எதிராக போராடுகின்றனர்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்



கொழும்பு, மார்ச் 10

ஒரு இலட்சத்து 71 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சம்பளம், மூன்று வேளை உணவு மற்றும் சலுகைகளைப் பெற்று வரும் துறைமுக ஊழியர்களே வரி அதிகரிப்பு தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாகவும், இதனை ஒருபோதும் ஏற்க முடியாதெனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- கடந்த முறை இவ்வாறு துறைமுக ஊழியர்கள் போராட்டங்களில் ஈடுபட்டதால், இலங்கைக்கு வருகை தந்த 17 கப்பல்கள் வேறு நாடுகளை நோக்கிச் சென்றன. இதனால் நாட்டுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. அந்தக் கப்பல்களை மீளக் கொண்டு வருவதற்கு நாம் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டோம். எனினும் அவற்றில் சில கப்பல்களே மீண்டும் நாட்டுக்கு வருகை தந்தன.

தொடர்ச்சியான நட்டத்தை தவிர்த்து தற்போது துறைமுக அதிகார சபை 15 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. இந்த இலாபத்தை தொடர்ந்து தக்க வைக்கும் வகையில் பல வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய சந்தர்ப்பத்தில் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை நடத்தி, அத்துறையில் மீண்டும் நட்டம் ஏற்பட இடமளிக்க முடியாது.

துறைமுகம் போன்ற துறைகளுக்கு ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் சற்றும் பொருந்தாது. எமக்கான வருமானத்தை தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளின் துறைமுகங்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றன. இத்தகைய போராட்டங்கள் அதற்கு வாய்ப்பளித்து விடும் என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டியுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்களுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் கடன்களை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானங்களை மாற்ற முடியாது. இதுபற்றி, அவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளோம்-என்றார். (அ)

# விபசாரத்தில் ஈடுபடும் ஆண்கள் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 10

நாட்டில் பொருளாதார நெருக்கடியால் விபசாரத்தில் ஈடுபடும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெண்களை திருப்திப்படுத்தும் ஆண் பாலியல் சேவையாளர்கள் பலர் தற்போது இணையத்தளம் ஊடாகவும் விளம்பரம் செய்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி உச்சமடைந்ததால், இலங்கையின் பெரும்பாலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், தற்கொலைகளும் அதிகரித்துள்ளன.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் இதனால் பெரும் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளன. இதனால், பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர ஆரம்பித்துள்ளனர். எந்த வாய்ப்புமில்லாதவர்கள், வாழ்க்கை நெருக்கடியை சமாளிக்க பாலியல் உறவை வாழ்வாதாரமாக பயன்படுத்தும் போக்கு அதிகரித்துள்ளது. சமீபத்திய பொருளாதார நெருக்கடியின் விளைவாக விபசாரத்தில் ஈடுபடும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், 20 முதல் 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களும் தங்கள் வாழ்வாதாரத்துக்காக பாலியல் தொழிலில் ஈடுபடுவது கணிசமாக அதிகரித்துள்ளது.

இந்த துறையுடன் சம்பந்தப்பட்டவர்களின் தகவலின்படி, இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்த கடந்த சில மாதங்களுக்குள், அதிகமான ஆண்கள் 'ஆண் பாலியல்' சேவைகளை வழங்கும் இணையத்தளங்களில் பதிவு செய்துள்ளனர்.

உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களில் பதிவு செய்யப்பட்ட பல இலங்கையர்களின் பெயர் விபரங்கள் தற்போது இணையங்களில் காணப்படுகின்றன. இப்படி பதிவு செய்த ஆண்கள் 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள். வழங்கப்படும் சேவைகளுக்கு ஏற்ப கட்டணங்கள் மாறுபடும்.

ஏறக்குறைய அனைத்து ஆண் சேவையாளர்களும் ஒரு மணி நேரத்துக்கு அமெரிக்க டொலர்களில் வசூலிக்கின்றனர். ஒரு மணி நேர சேவைக்கு 20 டொலர்கள் முதல் 50 டொலர்கள் வரை அறவிடுகின்றனர். முழு இரவுக்கான சேவைக்கு 100 டொலர்கள் முதல் 500 டொலர்கள் வரை அறவிடப்படுகிறது.

வாடிக்கையாளரால் ஓர் ஆண் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர்களின் வயது மற்றும் தொடர்பு எண் மற்றும் படத்துடன் சேவை வழங்குநர் பற்றிய சுருக்கமான அறிமுகத்தை இணையதளங்கள் வழங்குகின்றன. அனைத்து பணப் பரிவர்த்தனைகளும் நேரடியாக மட்டுமே செய்யப்படுகின்றன. தற்போதைய நாணய மாற்று விகிதத்தின்படி இலங்கை ரூபாயில் செலுத்த முடியும். வழங்கப்பட்ட சில சேவைகளில் மசாஜ்களும் அடங்கும் மற்றும் அனைத்து இணையத்தளங்களும் வாடிக்கையாளர் மற்றும் துணைக்கு இடையே உள்ள இரகசியத்தன்மையை வலியுறுத்தியுள்ளன.

எனினும், பிரபலங்களிடம் ஒரு முழு இரவு சேவை வழங்க ரூ. 50 ஆயிரம் முதல் அறவிடப்படும் என்று கூறினார். இந்தத் தொழில் மூலம் பணத்தை விரைவாக சம்பாதித்ததாகவும் அவர் கூறினார். (ஐ)

# அரசியல் கட்சிகளில் பயங்கரவாதிகள்; அவர்களே போராட்டம் செய்கிறார்கள்

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர காட்டம்

கொழும்பு, மார்ச் 10

**சாதாரண மக்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அரசியல் கட்சிகளில் உள்ள பயங்கரவாதிகளே போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதை பெரும்பாலான தரப்பினர் தற்போது மறந்து விட்டார்கள்.

அரசாங்கம் எடுத்த கடுமையான தீர்மானங்களினால் பொருளாதார பாதிப்புக்கு ஒப்பீட்டளவில் தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை எதிர்க்கட்சிகள் நன்கு அறிவார்கள். குறுகிய அரசியல் நோக்கத்திற்காக அவர்கள் அதனை பகிரங்கமாக குறிப்பிடுவதில்லை.

கடந்த ஆண்டு பல மணித்தியாலங்கள் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டபோது ஒரு தரப்பினர் வீதிக்கு இறங்கி தீ பந்தம் ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

தற்போது 24 மணித்தியாலங்களும் தடையின்றி மின்சாரம் விநியோகிக்கப் படும் போதும் ஒரு தரப்பினர் தீ பந்தம் ஏந்தி தற்போது போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

நாட்டின் நிதி நிலையை மென்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினர் ஒரு அரசியல் கட்சிக்கு சார்பாக செயற்படுகிறார்கள்.

ஒரு தரப்பினர் தான் அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுக்கிறார்கள். கடந்த வாரம் தொழிற்சங்கத்தினர் மேற்கொண்ட தொழிற்சங்கப் போராட்டத்தினால் தேசிய வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும். நாடு இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவேண்டும் எனப் பொது மக்கள் கருதுகிறார்கள்.

சாதாரண மக்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அரசியல் கட்சிக்கு ஆதரவாக செயற்படும் பயங்கரவாதிகள்தான் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்குத் தடையான போராட்டங்கள் மீது சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் தாக்குதல் மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை மென்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொருளாதார முன்னேற்றத்திற்கு தடையான போராட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது-என்றார். (அ)

# மாகாண சபை தேர்தலை முதலில் நடத்தவேண்டும்!

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு பட்ட கருத்து இருக்க முடியாது. ஆனால் அரை தசாப்தங்கள் நடத்தப்படாத மாகாண சபை தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டும். மாகாண சபைக்கான அதிகாரங்கள் முழுமைப் படுத்தப்பட வேண்டும் என்று தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தலைவர் தி. சிறிதரன் (சுகு) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

200 ஆவது ஆண்டை நெருங்கியும் இலங்கையின் பொருளாதார முதுகெலும்பான மலையகத் தோட்டத் தொழிலாளர்களின்(இன்று வரை இலங்கையின் 60 வீதமான வருமானத்தை ஈட்டி தருபவர்கள்)ஊதியம்,வீடு ,சுகாதாரம், நிலம் போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியவில்லை.

44 வருடங்கள் கடந்தும் இலங்கையின் விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்படவில்லை.

43 வருடங்கள் கடந்தும் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

34 வருடங்கள் கடந்தும் இந்திய இலங்கை ஒப்பந்த தின அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்ட மூலம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

அதிகாரங்கள் தொடர்ச்சியாக பறிக்கப்பட்டும் நீர்த்துப் போகச் செய்யபட்டும் வந்திருக்கின்றன

யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்தும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் பாரிய அளவிலான ராணுவ பிரசன்னம், சிறையில் உள்ளவர்களின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியவில்லை.

நல்லிணக்கம் தொடர்பாக ஐநா மனித உரிமை ஆணையத்தின் முன் ஒரு தசாப்தத்திற்கு மேலாக உருப்படியான ஆக்கபூர்வமான நீதியான நிகழ்ச்சி நிரல் ஒன்றை முன் வைக்க முடியவில்லை.

அண்மைய அரை தசாப்தங்களாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவில்லை.

ஆனால் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறாததுதான் ஒரு புதினமான கண்டு அறியாத ஜனநாயக மீறல் என்பது போல் பாசாங்கு செய்வது சகிக்க முடியவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு பட்ட கருத்து இருக்க முடியாது.

ஆனால் அரை தசாப்தங்கள் நடத்தப்படாத மாகாண சபை தேர்தல் முதலில் நடத்தப்படவேண்டும். மாகாண சபைக்கான அதிகாரங்கள் முழுமைப் படுத்தப்பட வேண்டும்.

மாகாண சபையுடன் ஒத்திசைவாக இயங்கவேண்டியது உள்ளூராட்சிச் சபை.

டென்மார்க் இளவரசன் நாடகத்தில் போல் வண்டிக்கு முன் குதிரையை பூட்ட வேண்டும் என்கிறார்கள்.!?

அதிகார பகிர்விற்காக பல்லின சமூகங்களின் நாட்டுக்காக பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுதிகளும் லட்சக்கணக்கான மக்களும் உயிரிழந்திருக்கிறார்கள்.

மாகாண சபையும் இல்லை என்றாகி விட்டால் உள்ளூராட்சித் தேர்தலில் அக்கறை செலுத்துவதற்கு தமிழ் பேசும் மக்களுக்கு என்ன அக்கறை வேண்டி கிடக்கிறது??

அரசியல் சட்ட மற்றும் தார்மீக மீறல்கள் எமது நாட்டின் அண்மைய வரலாறு முழுவதும் காணப்படுகிறது.

இவை முதலில் களையப்படுவதும் சுத்தப்படுத்தபடுவதும் செம்மைப்படுத்தப்படுவதும் அவசியம்-என்றார். (அ)

# அரச நிறுவனங்களை விற்பதால் இலங்கை 4.5 பில்லியன் டொலர்களை திரட்டக்கூடும்!

## எக்கணமி நெக்ஸ்ட் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 10

அரச நிறுவனங்களை விற்பதன் மூலம் இலங்கை 4.5 பில்லியன் டொலர்களை திரட்டும் என எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி எக்கணமி நெக்ஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

விற்பனை செய்யப்படும் நிறுவனங்களின் பட்டியலில் சிறிலங்கா ரெலிகொம், லிட்ரோ காஸ், சிறிலங்கன் கேட்டரிங், எயார்போர்ட் கிரவுண்ட் ஹேண்ட்லிங், ஹில்டன் ஹோட்டல் உள்ளிட்டவை அடங்குவதாக இரண்டு அரசாங்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி எக்கணமி நெக்ஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இலாபம் ஈட்டும் மற்றும் நட்டமடையும் 14 அரச நிறுவனங்களை விற்பனை செய்வதன் மூலம் சுமார் 4.5 பில்லியன் டொலர்கள் வருமானம் ஈட்டுவதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நட்டத்தில் இயங்கும் சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மீது இந்திய தனியார் நிறு வனமொன்று தீவிர ஆர்வம் காட்டி வருவதுடன், கட்டாரும் சில சொத்துக்கள் மீது ஆர்வம் காட்டி வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பொதுத்துறை நிறுவனங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியே பொதுச்சொத்துகளின் பங்கீடு என்றும் குறித்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# கண்ணீர்ப் புகையினால் பல்கலைக்கழக பாதுகாப்பு அலுவலர் பலி என சந்தேகம்!

## சபையில் கூறினார் புத்திக பத்திரண எம்.

கொழும்பு, மார்ச் 10

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் காவல்துறையினரின் கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதலால் உயிரிழந்துள்ளதாகவே சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழக மாணவர்களுடனான மோதலின்போது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியதன் காரணமாகவே பாதுகாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்தார் என அவர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

பொலிஸாரின் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் அந்தப் பகுதியை நிரப்பியதுடன் அருகில் உள்ள பாடசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக பத்திரன தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுடனான மோதலின்போது கொழும்பு பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிஸார் பலவந்தமாக நுழைந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (அ)

# முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் முன் இ.போ.ச பஸ்களை நிறுத்திப் போராட்டம்!

முல்லைத்தீவு, மார்ச் 10

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் முன்பாக இலங்கை போக்குவரத்துசபையின் முல்லைத்தீவு சாலைக்கு சொந்தமான பஸ்கள் நிறுத்தப்பட்டு, போராட்டமொன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

முல்லைத்தீவு இ.போ.ச சாலையினால் நடத்தப்படும் கிழக்கு மாகாண பஸ் சேவையை குழப்பும் விதமாக தனியார் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சேவையை நிறுத்துமாறு கோரியே இந்த போராட்டம் நடந்தது.

முல்லைத்தீவு சாலையிலிருந்து மட்டக்களப்புக்கான பஸ் சேவை நடத்தப்பட்டு வருகின்றது. இந்த பஸ் மட்டக்களப்பிலிருந்து புறப்படும் நேரத்தை குறிவைத்து, அம்பாறையிலிருந்து முல்லைத்தீவுக்கு தனியார் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையிலிருந்து புறப்பட்டு வரும் தனியார் பஸ், மட்டக்களப்பிலிருந்து புறப்படும் இ.போ.ச பஸ்ஸூக்கு முன்பாக பயணிக்கும். இதனால் இ.போ.சவின் வருமானத்தில் வீழ்ச்சியேற்பட்டுள்ளது.

தூர சேவைகள் இவ்வாறு அண்மித்த



நேரத்தில் இடம்பெற முடியாது.

இதைச் சுட்டிக்காட்டிய முல்லைத்தீவு சாலை இ.போ.ச ஊழியர்கள், அம்பாறை தனியார் பஸ்ஸின் சேவையை நிறுத்துமாறு முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் கோரியிருந்தனர்.

எனினும், முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கையெடுக்கவில்லை.

இதையடுத்து, தமக்கு உடனடி தீர்வு தர வேண்டுமென வலியுறுத்தி, முல்லைத்தீவு சாலையின் பஸ்களை, முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் முன்பாக நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# இலங்கை மீண்டெழ உதவுவதில் சாதகமான பங்கு வகிக்கும் சீனா

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

**இலங்கை கடன் நெருக்கடியிலிருந்து விடுபட உதவுவதில் 'சாதகமான பங்கை' வகிப்பதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

சீன ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி பதிலளிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்புக்காக எழுத்து மூல உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் சீனா இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இலங்கையின் தற்போதைய சவால்களை சமாளிக்கவும், கடன் சுமையை எளிதாக்கவும், நிலையான வளர்ச்சியை அடையவும் உதவுவதில் சாதகமான



பங்கை வகிக்க, தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கை தரப்புடன் கடனை அகற்றும் திட்டங்களை விரிவாக விவாதிப்பது டன் தொடர்புடைய நிதி நிறுவனங்களுக்கு சீனா, ஆதரவளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# மகனை சவரக்கத்தியால் வெட்டிய தந்தை கைது!

கொழும்பு, மார்ச் 10

பசறை - கோணகலை பகுதியில் தமது மகனை சவரக்கத்தியால் வெட்டிய நான்கு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குடும்பத்தகராறு காரணமாக தந்தை தமது மகனை சவரக்கத்தியால் வெட்டியுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இடது கை மற்றும் வயிற்றுப்பகுதியில் பலத்த காயங்களுடன் மகன் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

58 வயதுடைய தந்தை ஒருவரே 28 வயதுடைய தனது மகனை சவரக்கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# எம்.பியாகவுள்ளார் ஜனக ரத்நாயக்க!

## சபையில் கூறினார் காஞ்சன



கொழும்பு, மார்ச் 10

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க அரசியல் கட்சி ஒன்றின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்துக்கொள்ளவுள்ளார் என பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர், அரசியலில் ஈடுபட்டிருப்பதால் அவரைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார். (அ)

# எம்.பி. பதவியை ஏற்கமாட்டேன்!



## அடித்து கூறினார் ஜனக ரத்நாயக்க

கொழும்பு, மார்ச் 10

எந்தவொரு அரசியல் கட்சியிலிருந்தும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கமாட்டேன்" என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அமைச்சர் காஞ்சன விஜேசேகர இது தொடர்பில் வெளியிட்ட அறிவிப்பானது, இலங்கையின் ஒரு பொதுவான அரசியல்வாதிக்கு சிறந்த உதாரணம் என ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அரசியல் கட்சியொன்றின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஜனக ரத்நாயக்க பதவிப் பிரமாணம் செய்ய உள்ளதாக தெரிவித்த தகவலுக்கு ரத்நாயக்க கண்டனம் தெரிவித்தார். (அ)

# 75ஆவது சுதந்திர தின நினைவு நாணய குற்றிகள் விற்பனைக்கு!

கொழும்பு, மார்ச் 10

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான, புழக்கத்தில் இல்லாத 1000 ரூபா நினைவு நாணய குற்றிகள் விற்பனை செய்யப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முதல், குறித்த நாணயமொன்றினை 6,000 ரூபா என்ற விலையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தநிலையில், முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் நாணயங்கள் வழங்கப்படவுள்ளதுடன், ஒருவருக்கு ஒரு நாணயம் மட்டுமே விற்பனை செய்யப்படுமென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த நினைவு நாணயக் குற்றியை பெற்றுக் கொள்ள விரும்புவோர், மத்திய வங்கியின் விற்பனை நிலையங்களில் தமது தனிப்பட்ட அடையாள விவரங்களைச் சமர்ப்பித்து நாணயங்களை கொள்வனவு செய்யமுடியுமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்த நாணய குற்றியை மத்திய வங்கியில் கருமபீடத்தில் கொள்வனவு செய்யமுடியும்.

அத்துடன், கொழும்பு 1 இல் உள்ள நாணய நூதன சாலையிலும், அனுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியாவில் உள்ள பிராந்திய அலுவலகங்களிலும் நாணய குற்றியை பெற்றுக் கொள்ளமுடியுமென மத்திய வங்கி மேலும் அறிவித்துள்ளது. (அ)

# மற்ற நாடுகளைவிட இலங்கைக்கு அதிகம் உதவியுள்ளது இந்தியாவே!

கொழும்பு, மார்ச் 10

பொருளாதார நெருக்கடியின் போது மற்ற எந்த நாட்டையும் விட இந்தியா இலங்கைக்கு உதவியதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு உதவ இந்தியா துணிச்சலான முடிவுகளை எடுத்ததாகவும், சுமார் 3.9 பில்லியன்



மதிப்புள்ள இருதரப்பு கடன் மற்றும் அங்கீகாரத்தை வழங்கியதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்திய நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவர், இந்திய அரசாங்கம் துணிச்சலான முடிவுகளை எடுக்க முன்வந்தது மட்டுமல்லாமல், இந்திய மக்களும் இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தனர் என்று கூறினார்.

இலங்கையை காப்பாற்ற இந்தியாவின் தலையீடு மற்ற நாடுகளை விட அதிகமாக இருப்பதாகவும், அலி சப்ரி கூறினார். (அ)

# சீன அரசின் சீருடை உதவி முழுமையாக கிடைத்துள்ளது

கொழும்பு, மார்ச் 10

சீன அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட பாடசாலை சீருடைக்கான உதவி முழுமையாக கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சீருடை விநியோகம் விரைவில் இடம்பெறும் என அவர் குறிப்பிட்டார்.

சீனாவினால் வழங்கப்படும் சீருடைத் தொகுதியின், இறுதிக்கட்ட விநியோகம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்தபோதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை தெரிவித்தார். (அ)

# யாழ்.வாள்வெட்டு சம்பவம்: கனடாவில் இருந்து பணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்றுக்காக கனடாவில் இருந்து நிதியளிக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

கனடாவிலிருந்து ஒருவர் அனுப்பிய பணத்தை பெற்றுக் கொண்டு கடந்த 26ஆம் திகதியன்று வாள்வெட்டு சம்பவம் ஒன்றில் ஈடுபட்டதாக கூறி, மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் பகுதியில் கடந்த பெப்ரவரி 26ஆம் திகதி நடத்தப்பட்ட வாள்வெட்டு தாக்குதலில் ஒருவர் காயமடைந்ததுடன் அவரது காரும் சேதமாக்கப்பட்டது.

இந்தநிலையில், கைது செய்யப்பட்ட முதலாவது சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில் கனடாவிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா பணம் அனுப்பப்பட்டு இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிய வந்துள்ளது.

அத்துடன், பணம் அனுப்பியவர் வாள்வெட்டுச் சம்பவத்துக்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இதன்போது அவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பல்கலை வளாகத்துக்குள் பொலிஸார் பிரவேசித்தமை தொடர்பில் நடவடிக்கை

## சபையில் கூறினார் கல்வி அமைச்சர்

கொழும்பு, மார்ச் 10

பல்கலைக்கழக வளாகத்துக்குள் பொலிஸார் பிரவேசித்தமை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பல்கலைக்கழக வளாகத்திற்குள் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பிரவேசித்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே கல்வி அமைச்சர் இந்த விடயத்தை கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்திடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

களனி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற சம்பவங்களை நினைவு கூர்ந்த புத்திக பத்திரன, அடுத்த உயிர்ப்பலி பல்கலைக்கழகங்களுக்குள் பதிவாகுமானால் அது முழு நாட்டுக்குமான பேரிழப்பாகும் எனக் கூறினார்.

மாணவர்களின் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமது அமைச்சு எந்த நேரத்திலும் தயாராகவுள்ளதென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதன்போது குறிப்பிட்டார். (அ)

# கொலை, தற்கொலை என அதிரும் சுவிஸ் தமிழ் சமூகம்?

அஜீவன்

தமிழர் ஒருவர் சுவிஸ் நாட்டில் தனது மனைவியைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார் என்ற செய்தி ஏற்படுத்திய பரபரப்பு அடங்குவதற்கு இடையில், இளைஞர் ஒருவர் தன்னைத் தானே எரித்துக் கொண்டு மரணத்தைத் தழுவினார் என்ற செய்தி வெளியாகி இருக்கிறது.

இரண்டு சம்பவங்களும் பலர் பார்த்திருக்க நடைபெற்றுள்ளன.

கொலை நடைபெற்ற 10 நாள் இடைவெளியினுள் நடைபெற்ற தற்கொலை என்பது தமிழர் மத்தியில் என்னதான் நடக்கிறது என்ற துயர் மிகுந்த விவாதத்தைத் தோற்றுவித்துள்ளது.

அதேவேளை, தற்கொலைக்கான காரணம் எதுவாக இருக்கக் கூடும் என்ற ஊகங்களும் அவரவர், வசதிக்கு ஏற்ப உலா வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

வழக்கம் போன்று, தமிழ்க் கலாசாரத்தின் காவலர்கள்(?) என சொல்லிக் கொள்வோர் பழியைப் பெண்களின் மீது சுமத்திவிட்டுக் கடந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்தக் கட்டுரை எழுதப்படும் வரை தற்கொலைக்கான காரணம் எதுவும் வெளியாகவில்லை.

சிலவேளை, உண்மைக் காரணம் என்றுமே வெளிவராமல் கூடப் போகலாம்.

தற்கொலையையே தடுக்க முடியாமல் போய் விட்டது, இதில் காரணத்தை அறிந்துகொண்டு என்ன செய்வது என்று கூடச் சிலர் சிந்திக்கக் கூடும்.

கொலையோ, தற்கொலையோ இரண்டுமே விரும்பத்தகாத சம்பவங்கள்.

அவை தடுக்கப்பட வேண்டியவை. காரணங்களை அறிந்து கொள்வதன் மூலமேயே அவற்றைத் தடுக்க முடியும். குறைந்தது தடுப்பதற்கான முயற்சியையேனும் எடுக்க முடியும்.

பொதுவாக கொலைகளைத் தடுப்பதில் சிரமம் உள்ளது. அதிலும் திட்டமிட்ட கொலையைத் தடுப்பது கடினமே.

ஆனால், சற்று விழிப்போடு இருந்தால் தற்கொலைகளைத் தடுத்துவிட முடியும்.

தற்கொலை செய்பவர்களில் அநேகர் தங்கள் வாழ்க்கை மீதான வெறுப்பு காரணமாக அல்லது தமது பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காண முடியாத கையறு நிலை காரணமாகவே தற்கொலைக்குத் தூண்டப்படுகின்றனர். ஒருவர் அத்தகைய நிலைக்குச் செல்வதைத் தடுத்துவிட்டால் அவரைத் தற்கொலையில் இருந்து காப்பாற்றி விடலாம். அதற்கான பொறுப்பும் கடமையும் அவரது குடும்பத்தினரின், நண்பர்களின் கரங்களிலேயே உள்ளது.

உளவியலாளரின் கருத்துகளின் பிரகாரம் தற்கொலை செய்து கொள்வதற்கான உந்துதல் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது. தமது வாழ்க்கையை அகாலத்தில் முடித்துக் கொள்ளும் அந்த உந்துதலை மனிதன் வெற்றி கொள்ள அவனது அறிவு பயன்படுகின்றது. அது மாத்திரமன்றி பந்தம், பாசம், கடமை, பொறுப்பு போன்ற அம்சங்கள் வாழ்வில் பிடிப்பை ஏற்படுத்துகின்றன. அத்தோடு இலட்சியமும் இணைந்து கொண்டால் ஒருவரது வாழ்வுக்கு அர்த்தமும் கிடைத்து விடுகின்றது. அவ்வாறு வாழ்பவர்கள் தற்கொலையைக் கனவிலும் கூட நினைக்க மாட்டார்கள்.




தற்கால வாழ்வியல் சவால்கள் நிறைந்ததாக உள்ளது. சவால்களை எதிர்கொள்ளத் தைரியம் தேவைப்படுகின்றது.

'சூழலில் இருந்தே சிந்தனை உருவாகிறது' என்ற மார்க்சின் கூற்றின் அடிப்படையில் ஒருவருடைய சிந்தனையை அவரது நேரடிக் குடும்பமும், சமுதாயமுமே செப்பனிடுகிறது எனலாம்.

குழந்தையாக இருக்கும் போது பல விடயங்களைக் கற்றுத் தரும் குடும்பம், அந்தக் குழந்தைக்குத் தைரியத்தையும் கற்றுத் தர வேண்டும். மிக முக்கியமாக தோல்வி என்பது வாழ்வின் ஒரு தவிர்க்க முடியாத அங்கம் என்பதையும் கற்றுத் தர வேண்டும்.

சிக்கலான வேளையில் பக்க பலமாக ஒரு குடும்பமோ, நண்பர் குழாமோ அமையுமாயின் அதைவிடச் சிறந்த வாழ்க்கை எதுவும் இல்லை. ஆனால், இன்றைய குடும்பச் சூழல் அதனை வழங்குவதாக இல்லை. மாறாக, சிக்கல் எழுகின்ற தருணங்களில் தனித்து விடப்பட்ட உணர்வே பலருக்கும் ஏற்படுகின்றது.

குறிப்பாக, புலம்பெயர் சூழலில் குடும்பங்கள் மத்தியிலான விரிசல் பாரியதாக உள்ளது. பொருள்தேடும் நிர்ப்பந்தம் காரணமாக பெற்ற பிள்ளைகளைக் கூடக் கவனிக்க முடியாத நிலையில் பெறறோர் உள்ளனர்.

அன்புக்காக ஏங்கும் பிள்ளைகள் யாரிடம் அதனைப் பெறுவது எனத் தெரியாமல் உள்ளனர். பிள்ளைகள் எதிர்பார்க்கும் விடயங்களைப் பூர்த்தி செய்ய முன்வராத பெற்றோர், தாம் விரும்பும் அனைத்தையும் அல்லது தாம் செய்ய முடியாமல் போன அனைத்தையும் பிள்ளைகளைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்ள நினைக்கின்றனர். இத்தகைய போக்கு உறவுகளின் விரிசலை அகலமாக்குகின்றது.




குடும்ப உறுப்பினர்கள் இடையேயான கருத்தாடல்களை புலம்பெயர் வாழ்வியல் பெரிதும் இல்லாமல் செய்துள்ளது. தப்பித் தவறிக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களும் கூட சண்டை, சச்சரவிலேயே முடிந்து போகின்றன. ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் வாய்ப்பற்ற சூழல் தொடர்ந்து நீடிக்கின்றது. இதன் விளைவாக நண்பர்களிடம் இருந்தே சொந்தப் பிள்ளைகளின் விருப்பு வெறுப்புக்களைக் கேட்டறியும் நிலை உருவாகின்றது.

வீட்டுக்கு வெளியே செல்லும் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், யாரோடு பழகுகிறார்கள் போன்ற விடயங்களை அறியும் வாய்ப்பு பெற்றோருக்கு இல்லை. ஒரு சிலருக்கு அத்தகைய விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கூட இருப்பதில்லை.

மறுபுறம், பிள்ளைகளின் அறிவுத் தேடலோடு ஒத்துப்போகும் வகையில் பெற்றோரின் அறிவு வளர்ச்சி இல்லாமை மற்றொரு குறையாக உள்ளது. தமது பிரச்சனைகளுக்கான ஆலோசனை வழிகாட்டலை வழங்கும் இடத்தில் தமது பெற்றோர்கள் இல்லை என்ற சிந்தனை பிள்ளைகளின் மனதில் தோன்றிவிட்டால் அவர்கள் பெற்றோரை நாட மாட்டார்கள்.

அது ஏற்கனவே உள்ள பிளவை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. நாளடைவில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான சாதாரண உரையாடல் கூட நின்று போகின்றது. நவீன உலகின் அறிவியல் போக்கைப் புரிந்து கொள்ள பெற்றோர்கள் முயற்சி செய்வது அவசியம் என்பது ஒருபுறம் இருக்க, தமது உண்மை நிலையைப் பிள்ளைகளிடம் பேசிப் புரிய வைப்பதும் தேவையாகிறது. இதனூடாக பிள்ளைகளுடனான ஊடாட்டம் தடைப்படாமல் பார்த்துக்கொள்ள முடியும்.

இது விடயத்தில் நண்பர்களின் பங்கும் முக்கியமானது. நட்பு என்பது வெறுமனே கூடிக் களிப்பதற்கு மட்டுமானது அன்று. துயரத்தில் தோள் கொடுப்பதும், பகிர்ந்து கொள்வதும் அதில் அடங்கும். நண்பர்கள் நினைத்தால் தமது சகாக்களின் எண்ணவோட்டத்தைப் புரிந்துகொள்ள முடியும். சரியான நேரத்தில் தலையீடு செய்து விபரீதங்களைத் தடுத்துவிட முடியும்.

குடும்பத்திலோ நட்பு வட்டத்திலோ கிடைக்காத ஆலோசனை வழிகாட்டல்களை வழங்க புலம்பெயர் தேசத்திலே ஆலோசனை மையங்கள் நிறைந்து கிடக்கின்றன. பிரச்சனை எதுவாக இருந்தாலும் அவற்றை முறையாக அறிவுபூர்வமாக அணுகி எது தேவையோ அதனைச் செய்வதற்கு நிபுணர்கள் காத்திருக்கிறார்கள். உரிய நேரத்தில் அவர்களின் கதவுகளைத் தட்டுவது மாத்திரமே செய்ய வேண்டியது. அதற்கு உறவினர்கள், நண்பர்கள் சிறப்பாக வழிகாட்ட முடியும்.

நோய் வந்துவிட்டால் எவ்வாறு மருத்துவரை நாடுகிறோமோ அவ்வாறே மன அழுத்தம் உள்ளிட்ட உளவியல் பிரச்சனைகளுக்கும் சிகிச்சை பெற முடியும்.

கொலையோ தற்கொலையோ எது வாகினும் அவை தனிப்பட்ட நபர்களின் பிரச்சனை என நினைத்துச் செயற்படுவது தவறான அணுகுமுறை. யதார்த்தத்தில் அது சமூகத்தின் பிரச்சனை. ஒவ்வொரு கொலையின் பின்னும் தற்கொலையின் பின்னும் உள்ள காரணத்தை நுணுகி ஆராய்ந்தால் இதன் உண்மை புலப்படும். ஆணவக் கொலையாக இருந்தாலும், கௌரவத்தைக் காப்பதற்காகப் புரியப்படும் தற்கொலையாக இருந்தாலும் அங்கே சமூகம் நேரடியாகச் சம்பந்தப்படுகின்றது. பழக்கவழக்கம், பண்பாடு, கலாசாரம் போன்ற அம்சங்கள் சமூகத்தின் கூறுகளே.

எனவே, கொலைகளை, தற்கொலைகளைத் தடுக்கும் விடயத்தில் விரைந்து செயற்பட வேண்டிய கடப்பாடு சமூகத்துக்கு உள்ளது.

சமூகம் என்பது யாது? நீங்களும் நானும்தானே, வாருங்கள் கரங்கோர்ப்போம்.

வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்?

●



# இலங்கைக்கு ஐ.எம்.எவ். கடன் கிடைக்க சீனா இணங்கியது - இது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும்?



சீனாவிடமிருந்து கிடைக்கப் பெற்ற கடன் மறுசீரமைப்பிற்கான நிதி உறுதிப்பாட்டு கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை தானும், இலங்கை மத்திய வங்கி ஆளுநரும் கையெழுத்திட்டு, சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தின் தற்போதைய நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டம் ஆகியன குறித்து, நாடாளுமன்றத்தில் (மார்ச்.07) விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி, சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து கடன் மறுசீரமைப்புக்கான நிதி உறுதி கடிதம் தனக்கு கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு கிடைக்கப் பெற்ற கடிதத்தில் தானும், இலங்கை மத்திய வங்கி ஆளுநரும் கையெழுத்திட்டு, அதனை உடனடியாக சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் கூறுகின்றார்.

இதன்படி, நாட்டிற்கான தனது கடமையை நிறைவேற்றியுள்ளதாக கூறிய ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியம் தனது கடமையை இந்த மாதம் இறுதிக்குள் நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைக்கப் பெற்றவுடன், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய வற்றின் முதலாம் கட்ட நிதி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மிகவும் சிரமமான நிலைமைக்கு மத்தியில் சாதகமான நிலைக்கு கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

‘பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பல கடினமான பொருளாதார நடவடிக்கைகளை எடுத்தோம். பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொண்டு வருகிறோம். இதனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தொடர்ச்சியாக இன்னல்கள் ஏற்படும். இத்தகைய கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலைக்கு மத்தியில், கடந்த 7-8 மாதங்களாக செலவழித்து, அதை ஒரு சாதகமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். இதிலிருந்து முன்னேற பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை. இதை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு செல்வாக்குச் செலுத்தும் குழுக்கள், அரசியல் கட்சிகள், தொண்டர் குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்றவை இது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.” என அவர் கூறியுள்ளார்.

அதிகரிக்கப்பட்டுள்ள வரிச்சுமையை குறுகிய காலத்திற்கு பராமரிக்கப்பட வேண்டும் எனவும், அவ்வாறு இல்லையாயின், மிக ஆபத்தான நிலையை எதிர் நோக்க வேண்டும் எனவும் ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

‘வரிச்சுமை அதிகமாக உள்ளதாக தொழில் வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும், இந்த நிலைமை ஒரு குறுகிய காலத்திற்கு பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், இந்தத் திட்டம் சீர்குலைந்தால், 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இருந்த நிலையை விட மிகவும் ஆபத்தான இடத்திற்கு நாடு தள்ளப்படலாம். அப்போது சம்பளம், ஓய்வூதியம், வேலை என்பன பறிபோகும் தொழிற்சாலைகள் மூடப்படும், பாடசாலைகள் தினமும் மூடப்படும் என்று பலரும் நினைத்தார்கள். அவற்றை நாம் ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளோம். ஆனால், சமூகத்தில் செல்வாக்கு மிக்க குழுக்கள் நாம் முன்வைத்த வேலைத்திட்டத்தை பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நாசமாக்கினால், அதிலிருந்து உருவாகும் சமூக மாற்றம், மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இது நம் சமூகத்தில் முன்னெப்போதும் இல்லாத சோகமான காலத்திற்கு வழிவகுக்கும்.” என ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார்.

கருத்துக்களை வெளியிடும் உரிமையை தாம் ஏற்றுக் கொள்வதாக கூறிய ரணில் விக்ரமசிங்க, அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டால், அதற்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.

‘கருத்துக்களை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை அமைதியாக செய்யுங்கள். கூட் டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசாங்கம் கடுமையாகச் செயல்படும் என்று கூற விரும்புகிறேன்.”

ரூபா வலுவடைகின்றமை தொடர்பிலும் ரணில் விக்ரமசிங்க கருத்து தெரிவித்தார்.

‘இப்போது டொலர் விலை குறைந்து வருகிறது. ஜூலை 9ஆம் திகதி இந்த நாடு வீழ்ந்திருந்தால் இன்று இந்த நிலை இருந்திருக்காது. அப்போது யாரின் உதவியும் இருக்கவில்லை. இதற்கு நடவடிக்கை எடுத்த முப்படை மற்றும் பொலிஸாருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கையால்தான் இன்று நமக்கு எரிபொருளும் மின்சாரமும் கிடைத்துள்ளது. எனவே, அந்த சக்திகளுக்கு இந்த நிலைமையை தகர்க்க அனுமதிக்க மாட்டோம். இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க் கட்சியை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதனை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதி தேர்தலா பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியும். அதுவரை நீங்கள் காத்திருக்கத் தயாரா இல்லையா என்று கேட்கிறேன். உங்களுக்கு இதை ஏற்கவோ நிராகரிக்கவோ முடியும். குறிப்பாக ஜூன் நடுப்பகுதிக்குள் நாட்டின் வருமான நிலைமையை குறித்து கருத்தில் கொள்ள வேண்டும். அதிலிருந்து முடிவுகளை எடுக்கலாம். குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பித்து முன்மொழி வொன்றை கொண்டு வருவேன். அதைசபை ஏற்பதா இல்லையா என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். இன்றேல் எங்களுக்கு மாற்று வழியைக் தாருங்கள்.” என அவர் குறிப்பிட்டார்.

சீனாவின் நிதி உறுதி கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்துள்ள நிலையில், அது நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எவ்வாறான தாக்கத்தை செலுத்தும் என்பது குறித்து பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். ●

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி முறிகிறதா? ‘எதிர்விளைவு இருக்கும்’ - எச்சரிக்கும் அண்ணாமலை!

பாரதிய ஜனதா கட்சியில் இருந்து விலகிய நிர்வாகிகளை அதிமுகவில் இணைத்துக் கொண்டதை அடுத்து, இரு கட்சிகள் இடையேயான முரண்பாடு முற்றியுள்ளது. தங்களிடமிருந்து ஆட்களை எடுத்து திராவிட கட்சிகள் வளர்வதாக பாஜக மாநில தலைவர் கே. அண்ணாமலை குற்றம்சாட்டுகிறார். இளைஞர் அணியினர் எடப்பாடியின் படத்தை எரிக்கிறார்கள். முடிவுக்கு வந்ததா கூட்டணி?

பாஜகவிலிருந்து விலகிய அந்த கட்சியின் மாநில தகவல் தொழில்நுட்ப அணியின் செயலர் சி.டி.ஆர். நிர்மல் குமார் மார்ச் 5ஆம் தேதி அந்த கட்சியிலிருந்து விலகினார். அவர் அண்ணாமலை மீது பல்வேறு குற்றச்சாட்டுகளையும் சுமத்தினார்.

இதற்குப் பிறகு அவர் அதிமுகவின் இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமியைச் சந்தித்து அதிமுகவில் இணைந்தார்.

இந்த நிலையில், இன்று தகவல் தொழிநுட்ப அணி நிர்வாகி திலீப் கண்ணன், இதர பிற்படுத்தப்பட்டோர் அணியின் மாநில செயலாளர் ஜோதி, முன்னாள் மாநில செயலாளர் கிருஷ்ணன், திருச்சி புறநகர் மாவட்ட துணைத் தலைவர் விஜய் ஆகியோர் எடப்பாடி கே. பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.

இது தமிழக அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதிமுகவும் பாஜகவும் தொடர்ந்து இணைந்தே தேர் தல்களைச் சந்தித்து வந்த நிலையில், கூட்டணி கட்சியி லிருந்து விலகியவர்களை அதிமுக சேர்த்துக் கொண்டது குறித்து பாஜகவை சேர்ந்தவர்கள் தங்கள் அதிருப்தியை சமூக வலைதளங்களில் பகிர்ந்து கொண்டனர்.

பாஜகவை சேர்ந்த அமர் பிரசாத் ரெட்டி, கூட்டணி கட்சியாக இருந்துகொண்டு அதிமுக இதைச் செய்திருக்கக்கூடாது என விமர்சித்தார்.

ஆனால், இரு கட்சிகளின் பிரதான தலைவர்கள் யாரும் கூட்டணி குறித்து ஏதும் சொல்லாமல் இருந்தனர்.




இந்நிலையில், புதனன்று மதுரைக்கு செல்வதற்காக சென்னை விமான நிலையம் வந்த அண்ணாமலை, அங்கு செய்தியாளர்களிடம் பேசியபோது, ‘பாஜகவிலிருந்து ஆட்களை கூட்டிச் சென்றால்தான் திராவிட கட்சிகள் வளரும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது தமிழ்நாட்டில் பா.ஜ.கவின் வளர்ச்சியைக் காட்டுகிறது. ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை இருக்கும். இந்த செயலுக்கும் எதிர்வினை இருக்கும்” என தெரிவித்தார்.

இதற்குப் பிறகு, மதுரையில் செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலை மீண்டும் இந்த விவகாரம் குறித்து பேசினார்.இதையடுத்து, அதிமுகவின் முக்கிய பிரமுகர்கள் சிலர் ட்விட்டரில் தங்கள் எதிர்ப்புகளைப் பதிவு செய்ய ஆரம் பித்தனர்.

அதிமுக தகவல் தொழிநுட்ப அணியின் செயலரான சிங்கை ராமச்சந்திரன், ‘நோட்டாவை விட குறைவாக வாக்குகள் வாங்கி வந்த நிலையில், 2021ஆம் ஆண்டு தேர்தலில் பாஜக எப்படி எம்எல்ஏக்களை வென்றது?” என பதிவிட்டுள்ளார்.

அதிமுக வழக்கறிஞர் அணியின் இணைச் செயலரான ஆர்.எம். முருகவேல், ‘முதிர்ச்சி இல்லாத அரை வேக்காடுகளின் அரசியல் இப்படித்தான் இருக்கும். இது தொடர்ந்து, நாங்கள் நீண்டகாலமாக எதிர்பார்ப்பது. நடந்தால் நல்லது தான்” என்று பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையில், தூத்துக்குடியில் எடப்பாடி பழனிசாமியை விமர்சித்து பாஜக சார்பில் போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது.

அதில், ‘எங்கள் அண்ணன் அண்ணாமலையை கீழ்த்தரமாக விமர்சனம் செய்து பாஜகவிலிருந்து விலகிய நிர்வாகியை அதிமுகவில் சேர்த்துக் கொண்டு, கூட்டணி தர்மத்தைப் போற்றத் தவறிய துரோகி எடப்பாடி பழனிசாமியை கண்டிக்கிறோம்’ என குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் எடப்பாடி கே. பழனிசாமியின் புகைப்படத்தை எரித்தும் பா.ஜ.கவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பாக நான்கு பேரைக் காவல்துறை கைது செய்தது.

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் நெருங்கிவந்த நிலையில், 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ஒன்றாகச் சந்தித்தன. 2021ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற தேர்தலையும் இரு கட்சிகளுமே இணைந்து எதிர்கொண்டன. இதன் மூலம் நீண்ட நாட்களுக்குப் பிறகு பா.ஜ.கவிலிருந்து நான்கு பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்வாயினர். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலிலும் இரு கட்சிகளின் கூட்டணி நீடித்தது. ஆனால், இதற்குப் பிந்தைய பல சந்தர்ப்பங்களில் பா.ஜ.கவின் சில தலைவர்கள், தமிழ்நாட்டில் தாங்களே பிரதான எதிர்க்கட்சி என்று கூறியது கூட்டணிக்குள் சல சலப்பை ஏற்படுத்தியது.

வேறு சில சமயங்களில், வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் 25 தொகுதிகளை வெல்வோம் என்றும் பா.ஜ.கவினர் பேசி வந்தனர். இவையெல்லாம் உரசலை ஏற்படுத்திவந்த நிலையில், தற்போது இரு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வெளிப்படையாக தங்கள் முரண்பாட்டைத் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். ●

# 22 வயது கஞ்சா வியாபாரி கருவப்பங்கேணியில் கைது

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு - கருவப்பங்கேணி பிரதேசத்தில் புதூரைச் சேர்ந்த 22 வயதுடைய கஞ்சா வியாபாரி ஒருவரை 172 கிராம் கேரள கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.

மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரி வுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம் சுற்றுச் சூழல் பாதுகப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் சந்திமால் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சும்பவ தினமான நேற்று முன் தினம் கருவப்பங் கேணி பிரதேசத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது, வியா பாரத்துக்காக கஞ்சாவை எடுத்துச் சென்ற 22 வயது இளைஞனை மடக்கிப்பிடித்த துடன் 172 கிராம் கேரள கஞ்சாவை மீட் டனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நேற்று புதன்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை 14 நாட்கள் விளக்கமறிய லில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வசந்த விடுவிப்புக்கு எதிரான வழக்கை விசாரிக்க அனுமதி!

வசந்த முதலிகேவை விடுவிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் சமர்பித்த மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை விடுவிப்பதற்கான தீர்மானத் துக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த மேன்முறையீட்டை தாக்கல் செய்திருந்தார்.

இதன்படி, குறித்த மேன் முறையீட்டில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் அமைப்பின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை அன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்குமாறும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வசந்த முதலி கேவை போதிய சாட்சியங்கள் இல்லை எனக் கூறி விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவு சட்டத்திற்கு முரணானது எனவும், அதனை இரத்துச் செய்யும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரியும் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தார். (ஐ)

# 150 தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிப்பு!

திருமலை, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி ஹலோ எப்.எம். நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு நேற்று முன் தினம் மாலை திருமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி எப்.எம். சரீக் தலைமையில் இடம்பெற்ற இந்த மகளிர் தின நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.




இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியபதி கலபதி பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜீ.திசாநயக்க ஆகியோர் விசேட அதிதிகளாகவும், சிறப்பு அதிதிகளாக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன், சர்தாபுர விஷேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி எம்.ஆர். குணசேகர ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஹலோ எப்.எம். நிறுவனத்தினால் வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் சர்வதேச மகளிர் தினத்தில் பல்துறையைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள பெண் ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டு வருகின்றமையும், இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல் துறையைச் சேர்ந்த 150 தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது மகளிர்களினால் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதும் விஷேட அம்சமாகும்.

(அ)

# உள்ளூராட்சி தேர்தலை உடன் நடத்த வேண்டும்

## பௌத்த சாசன செயலணி

கொழும்பு, மார்ச் 07

தேசிய மற்றும் இராஜதந்திர ஸ்திரதன்மைக்காக உள்ளூராட்சி தேர்தலை ஜனாதிபதி உடனடியாக நடத்தவேண்டும் என பௌத்தசாசன செயலணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பௌத்த சாசன செயலணி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

அமைச்சர்கள் எண்ணிக்கையை 15ஆக மட்டுப்படுத்த வேண்டும், இராஜாங்க அமைச்சர்களை நீக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பௌத்தசாசன செயலணி ஆடம்பர பொருள் இறக்கு மதியை நிறுத்தவேண்டும் அந்த நிதியை தேர்தலிற்கு செலவிட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

## கல்வி tv CHANNEL-1

10.03.2023
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

10.03.2023
வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அம்பாறை மாவட்டத்தில் மும்முரமான அறுவடை!

## வீதிகளில் உலரவிடப்படும் நெல்





அம்பாறை, மார்ச் 10

**அம்பாறை மாவட்டத்தில் தற்போது நெல் வேளாண்மை அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகின்றது.**

அண்மையில் பொழிந்த மழை காரணமாக, அறுவடை சற்று சிரமத்திற்குள்ளாகி தடைப்பட்டிருந்தது.

தற்போது வெயில் எறிக்கின்ற காரணத்தினால், அறுவடை வழமைக்கு திரும்பியது.

அறுவடை இயந்திரங்களின் உதவியுடன் அறுவடை இடம்பெறுகிறது.

அதேவேளை, அறுவடை செய்யப்பட்ட நெல்லை பிரதான மற்றும் உள்ளூர் வீதிகளில் உலரவைக்கின்றார்கள்.

இதனால், போக்குவரத்து பிரச்னை தடங்கல்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களுண்டு.

பிரதான வீதிகளில் நெல் உலரவைப்பதால் இன்னோரன்ன பிரச்னைகள் ஏற்பட்டதுண்டு.

அதேவேளை, நெல்லை உலரவைக்க பொதுவான இடங்கள் போதுமான பரப்புடன் இல்லை என்பதும் உண்மை. (அ)

## விழிப்புலனற்றோர்களுக்கான ஓசைப்பந்து கிரிக்கெட் போட்டி

மட்டக்களப்பு, மார்ச் 10

மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தினால் சிநேகபூர்வ ஓசைப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டு. விவாநந்தா மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக அதன் செயலாளர் கே.லவக்குமார் தெரிவித்தார்.

குறித்த சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெறவுள்ள இச்சுற்றுப்போட்டியில், கொழும்பு இரத்மலானை விளையாட்டுக் கழகத்துடன் மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கக் கழகம் மோதவுள்ளது.

இப்போட்டி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 3.00 மணிவரை இடம்பெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எம்.கோபாலரெத்தினம் கலந்துகொண்டு வெற்றிபெறும் அணிக்கான பணப்பரிசு மற்றும் கேடயங்களை வழங்கவுள்ளார். (அ)

## "என் சிறகில் சிக்கிய வானம்" நூல் வெளியீடு

அம்பாறை, மார்ச் 10

எழுத்தாளர் மரீனா இல்யாஸ் ஷாபி எழுதிய "சிறகில் சிக்கிய வானம்" பயணக் கட்டுரைகளின் தொகுதி நாளை 11.03.2023 சனிக்கிழமை காலை 8.30 ற்கு சாய்ந்தமருது மழ்ஹருஸ்ஷம்ஸ் மகாவித்தியாலயத்தில் சிறிலங்கா பென் கிளப் அனுசரணையில் வெளியீடு காணவிருக்கிறது.

சிறிலங்கா பென் கிளப் தலைவி சம்மாந்துறை மஷூறா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அஷ்ஷெய்க் இர்பான் மௌலானா முதன்மை அதிதியாக கலந்து சிறப்பிக்கின்றார்.

கவிஞர் மன்சூர் ஏ காதிர் (ஓய்வுநிலை பல்கலைக் கழக பதிவாளர்) மற்றும் ஆய்வாளர் சிராஜ் மஷூர் (பணிப்பாளர், பேஜஸ் அறிவு மையம்) ஆகியோர் நூல்மீதான உரைகளை நிகழ்த்துகின்றனர்.

இன்னும் பல பிரமுகர்களும் ஆர்வலர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

## ஆசிரியர் தாக்கினார் என்று மாணவர் ஒருவர் முறைப்பாடு

அம்பாறை, மார்ச் 10

ஆசிரியர் ஒருவர் கடுமையாகத் தாக்கியதால் முழங்கால் 'சில்' பகுதி பாதிப்புக்குள்ளானதாக கூறப்படும் மாணவர் ஒருவருக்கு நியாயம் கோரி, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பாலமுனை அல் ஹிக்மா பாடசாலையில் தரம் 09 இல் கற்கும் ஐ. அப்துல் ஹாதிக் எனும் மாணவனே இவ்வாறு ஆசிரியரால் தாக்கப்பட்டார் என முறையிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த பாடசாலையில் வைத்து ஆசிரியர் தனக்கு பிரம்பால் ஒரு தடவை அடித்ததாகவும், இன்னொரு தடவை தனது சேர்ட் கொலரை பிடித்து அடித்துவிட்டு, தன்னை தூக்கி வீசியதாகவும் மாணவர் ஹாதிக் தெரிவித்தார்.

தற்போது பாதிக்கப்பட்ட மாணவர் நடக்க முடியாத நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் அக்கரைப்பற்றுக் காரியாலயம் ஆகியவற்றில் தாம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அங்கு நடவடிக்கை எடுக்கப்படாத நிலையிலேயே மனித உரிமை ஆணைக்குழுவில் தாங்கள் முறையிட்டதாகவும் மாணவனின் தாய் மற்றும் சகோதரன் கூறுகின்றனர். (அ)

## சமூக வலைத்தளங்களை கையாளுவது எவ்வாறு?

### மாணவ தலைவர்களுக்கு செயலமர்வு



அம்பாறை, மார்ச் 10

'ஊடக தர்மத்தை வலுப்படுத்தலும் அதன் ஊடாக வன்முறை தீவிரவாதத்தை தடுத்தலும்' எனும் தொனிப் பொருளில் திருக்கோவில் மற்றும் சம்மாந்துறை வலய மாணவர் குழுத்தலைவர்களுக்கான செயலமர்வொன்று அக்கரைப்பற்றில் நடாத்தப்பட்டது.

சுவாட் நிறுவனமானது எம்பவர் செயற்திட்டத்தின் கீழ் ஊடக தர்மத்தை வலுப்படுத்தலும் அதன் ஊடாக வன்முறை தீவிரவாதத்தை தடுத்தலும் எனும் தொனிப்பொருளில் முதலாம் மாணவர் குழுவினர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் அக்கரைப்பற்று சுவாட் தலைமையலுவலக பயிற்சி மண்டபத்தில் திட்ட இணைப்பாளர் க. பிறேமலதனின் வழிகாட்டலின் கீழ் நடத்தப்பட்டது.

இச்செயலமர்வை சம்மாந்துறை வலயக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான வி.ரி.சகாதேவராஜா நடத்தினார்.

இச்செயலமர்வில் ஊடக தர்மம், ஊடக ஒழுக்க நெறிவிதிகள் மற்றும் மாணவர்கள் எவ்வாறு பிறருக்கு தீங்கிழைக்காதவாறு சமூகவலைத்தளங்களை பயன்படுத்துவது போன்ற விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

இச்செயலமர்வில் திருக்கோவில் சக்தி வித்தியாலயம், விநாயகர் மகாவித்தியாலயம், நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயம், நாவிதன்வெளி கலைமகள் வித்தியாலயம், நாவிதன்வெளி விவேகானந்தா மகா வித்தியாலயம், சம்மாந்துறை அல்-அர்சத் மகாவித்தியாலயம், சம்மாந்துறை செந்நெல் சாகிரா வித்தியாலயம் மற்றும் இறக்காமம் அல்-அமீன் மகாவித்தியாலயம், இறக்காமம் அல்-அஸ்ரப் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 30 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## 200 ரூபாவை இலஞ்சமாக வாங்கிய பஸ் நிலைய பொறுப்பதிகாரி கைது

அம்பாறை, மார்ச் 10

கல்முனை தனியார் பஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பஸ் சாரதி ஒருவரிடம் 200 ரூபாய் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில், கொழும்பு இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த பொறுப்பதிகாரி, பஸ் நிலையத்தில் இருந்து போக்குவரத்து அனுமதிப் பத்திரம் இல்லாமல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுதற்கு பஸ் சராதிகளிடம் தொடர்ச்சியாக இலஞ்சம் வாங்கி வருவதாக இலஞ்ச ஒழிப்புப் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, கொழும்பு இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் நடத்துநருக்கு வழங்கிய ஆலோசனைக்கமைய, சம்பவ தினமான நேற்று முன்தினம் காலை 11.30 மணிக்கு சாரதியிடம் 200 ரூபாய் இலஞ்சமாக பஸ் நிலையப் பொறுப்பதிகாரி வாங்கியபோது, அங்கு மாறு வேடத்தில் இருந்த இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் அவரைக் கையும் களவுமாகப் பிடித்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட அவரை, கொழும்புக்கு அழைத்துச் சென்று, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

## சர்வதேச மகளிர் தினமும் திருவள்ளுவர் குருபூஜையும்

அம்பாறை, மார்ச் 10

சர்வதேச மகளிர் தினமும் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் குரு பூஜை தின நிகழ்வும் நேற்று முன்தினம் புதன்கிழமை காரைதீவு பிரதேச சபையில் நடைபெற்றன.



காரைதீவு பிரதேச தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் பிரதேச சபை வளாகத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

தவிசாளரினால் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையின் முன்பாக இவ்விரு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

திருவள்ளுவரின் திருக்குறள் பற்றிய உரையை தவிசாளர் ஜெயசிறில் நிகழ்த்த சபைச் செயலாளர் அ.சுந்தரகுமார் விசேட உரையாற்றினார்.

மகளிர் தினத்தின் முக்கியத்துவம் தொடர்பாக சபையின் பிரதம முகாமைத்துவ உதவியாளர் திருமதி ஜெயகலா சந்திரசேகரர் வரன் உரையாற்றினார்.

அங்கு பெண் உத்தியோகத்தர்களுக்கு கௌரவம் அளிக்கப்பட்டது. (அ)

## தாந்தாமலை மக்களுக்கு யானை டோர்ச்லைட்!

### மட்டு. றோட்டரியின் உயிர்காப்பு சேவை




அம்பாறை, மார்ச் 10

காட்டு யானைகளினால் பாரிய உயிராபத்தை எதிர்நோக்கி வரும் மட்டக்களப்பு தாந்தாமலை மக்களுக்கு ஒரு தொகுதி பாரிய டோர்ச் லைட்டுகளை மட்டக்களப்பு றோட்டரி கழகம் வழங்கியது.

மக்களின் உயிரை காப்பாற்றும் நோக்கில் முதல் கட்டமாக யானைகளை விரட்டும் பாரிய டோர்ச் லைட்டுகள் நேற்று வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு றோட்டரிக் கழகத் தலைவர் றோட்டேரியன் பு. ரமணன் அவற்றை மக்களுக்கு வழங்கினார். (அ)

# நோர்ட் ஸ்ட்ரீம் எரிவாயு குழாய்கள் தாக்குதல் பின்னணியில் உக்ரைன்?

## நேட்டோவுக்கு வந்தது சந்தேகம்



பிரஸ்ஸல்ஸ், மார்ச் 10

**ஐரோப்பாவுக்கு ரஷ்ய ஆற்றலை வழங்கும் நோர்ட் ஸ்ட்ரீம் குழாய்களை வெடிக்கச் செய்தது உக்ரைனிய சார்பு குழுவாக இருக்கலாம் என நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.**

கடந்த ஆண்டு மேற்கு மற்றும் ரஷ்யாவுக்கு இடையே ஒரு முக்கிய புள்ளியாக இருந்த உக்ரைனிய சார்பு குழு, நோர்ட் ஸ்ட்ரீம் குழாய்களை வெடிக்கச் செய்ததாக அமெரிக்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட உளவுத்துறை ஆய்வில் தெரிய வந்துள்ளதாக நியூயோர்க் டைம்ஸ் அறிக்கை தெரிவிக்கின்றது.

ஆனால், இதன் பின்னணியில் இருந்தவர்கள் யார் என்பது பற்றி மேலும் எதையும் கூறுவதற்கு முன்பு அவை இறுதி செய்யப்படும் வரை காத்திருப்பது சரியானது என ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்தார்.

இதனிடையே இந்த தகவல்களை கொண்டு வெளிப்படையான விசாரணையை நடத்துமாறும் அதில் தானும் பங்கேற்க விரும்புவதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

மேலும், ஊடக அறிக்கைகள் கவனத்தைத் திசைதிருப்ப ஒரு ஒருங்கிணைந்த முயற்சி எனவும் விசாரணையின்றி தாக்குதல்களைப் பற்றி அமெரிக்க அதிகாரிகள் எப்படி எதையும் கருத முடியும் எனவும் கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ், கேள்வி எழுப்பினார்.

இதேவேளை, உக்ரைனுக்கான ஆதரவை வலுவிழக்கச் செய்யும் ஊடக அறிக்கைகள் குறித்து தான் கவலைப்படவில்லை என உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் கூறினார்.

இதற்கிடையே, இந்த தாக்குதலை நடத்தியது உக்ரைனியக் குழுவா, உக்ரைனிய உத்தரவின் பேரில் நடந்ததா அல்லது உக்ரைனிய சார்பு குழு அரசாங்கத்தைப் பற்றி அறியாமல் செயல்படுகிறதா என்பதை தாங்கள் தெளிவாக வேறுபடுத்த வேண்டும் என ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சர் போரிஸ் பிஸ்டோரியஸ் தெரிவித்தார்.

ரஷ்யாவையும் ஜேர்மனியையும் இணைக்கும் குழாய்களில் வெடிப்புகள் செப்டம்பர் 26ஆம் திகதி சுவீடன் மற்றும் டென்மார்க்கின் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களில் நடந்தன. இந்த குண்டுவெடிப்புகள் வேண்டுமென்றே நடத்தப்பட்டவை என்று இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன, ஆனால் யார் பொறுப்பு என்று இது வரை கண்டறியப்படவில்லை. (அ)

# பாலின சமத்துவம் மறைந்து வருகிறது

## ஐ.நா. பொதுச் செயலர் சுட்டிக்காட்டு



ஜெனிவா, மார்ச் 10

பாலின சமத்துவம் 'நம் கண் முன்னே மறைந்து வருகிறது' என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், பெண்கள் தொடர்பான மதிப்பீட்டின்படி, பாலின சமத்துவம், '300 ஆண்டுகள் தொலைவில் உள்ளது என்று குட்டரெஸ் எச்சரித்துள்ளார்.

குட்டரெஸின் அறிக்கை கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பேரவையில் உரையாற்றிய குட்டரெஸ், ஆப்கானிஸ்தானில் 'பொது வாழ்க்கையிலிருந்து பெண்கள் அழிக்கப்பட்டுள்ளனர்' என்று கூறியுள்ளார்.

நூற்றாண்டு கால ஆணாதிக்கம், பாகுபாடு மற்றும் தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான கருத்துக்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மிகப் பெரிய பாலின இடைவெளியை உருவாக்கியுள்ளன.

இந்த நிலையில், உலக கட்டமைப்புகள் உலகின் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக பணி செய்யவில்லை என்றும் அந்தோனியோ குட்டரெஸ் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# பசுபிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் 5 நீர்மூழ்கி வாங்கும் அவுஸ்திரேலியா!



கான்பரா, மார்ச் 10

அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவுடனான ஒரு முக்கிய பசிபிக் பாதுகாப்பு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, 2030ஆம் ஆண்டுகளில் அவுஸ்ரேலியா ஐந்து அமெரிக்க வர்ஜீனியா தர அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அக்குஸ் ஒப்பந்தம் என்று அழைக்கப்படுவதன் கீழ், எதிர்வரும் ஆண்டுகளில் குறைந்தபட்சம் ஒரு அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலாவது அவுஸ்ரேலியா துறைமுகத்தை சென்றடையும் என நான்கு அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2030ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், பிரித்தானிய வடிவமைப்புகள் மற்றும் அமெரிக்க தொழில்நுட்பத்துடன் ஒரு புதிய வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டப்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் ஆகியோரை கடந்த திங்கள்கிழமை சான் டியாகோவில் சந்தித்து அக்குஸின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை வெளிப்படுத்த உள்ளார்.

2021ஆம் ஆண்டு செப்ரெம்பரில் முதன்முதலில் அறிவிக்கப்பட்ட பசிபிக் பாதுகாப்பு உடன்படிக்கை, சீனாவின் வளர்ந்து வரும் சக்தி மற்றும் பிராந்தியத்தில் உறுதியான நிலைப்பாட்டை எதிர்கொள்ளும் முயற்சியாகக் கருதப்படுகிறது மற்றும் இது சீனாவிடம் இருந்து கண்டனத்தைப் பெற்றுள்ளது.

பெயர் தெரியாத இரண்டு அதிகாரிகள், பேசுகையில், வருடாந்திர துறைமுக வருகைகளுக்குப் பிறகு, மேற்கு அவுஸ்ரேலியாவில் சுமார் 2027ஆம் ஆண்டுக்குள் அமெரிக்கா சில நீர்மூழ்கிக் கப்பல்களை நிலைநிறுத்தும் என்று கூறினார்.

அவுஸ்ரேலியாவில் ஏற்கனவே ஆறு வழக்கமாக இயங்கும் காலின்ஸ் தர நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்ளன, அவற்றின் சேவை காலம் 2036ஆம் வரை நீடிக்கப்படும். அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்கள் வழக்கமான நீர்மூழ்கிக் கப்பல்களைக் காட்டிலும் நீண்ட காலம் நீருக்கடியில் இருக்க முடியும் மற்றும் கண்டறிவது கடினம்.

திட்டமிடப்பட்ட புதிய வகை நீர்மூழ்கிக் கப்பல்கள், உற்பத்தி இடங்கள் பற்றிய விவரங்களை வழங்குவது உட்பட அதிகாரிகள் விபரிக்கவில்லை.

# தாய்வான் விடயத்தில் அமெரிக்கா சிவப்பு கோட்டை தாண்டக்கூடாது!

## எச்சரிக்கை விடுத்தது சீனா

பீஜிங், மார்ச் 10

அமெரிக்கா-சீனா இடையிலான உறவு சமீபத்திய ஆண்டுகளாக மிகவும் மோசமடைந்து வருகின்றது. பல்வேறு விவகாரங்களில் இரு நாடுகளும் சண்டையிட்டு வருகின்றன.

குறிப்பாக தாய்வான் விவகாரத்தில் இருநாடுகளும் மோதலை நோக்கி நகர்ந்து வருகின்றன. இந்த நிலையில் சீனாவின் புதிய வெளியுறவுத்துறை அமைச்சராக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பதவியேற்ற கின் காங், முதல் முறையாக சீன பாராளுமன்ற கூட்டத்தொடரில் பங்கேற்ற பிறகு ஊடகவியலாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார்.

அப்போது அமெரிக்காவுடனான பிரச்னை குறித்து அவர் தெரிவிக்கையில், அமெரிக்காவின் சீனக் கொள்கை பகுத்தறிவு மற்றும் ஒலி பாதையில் இருந்து முற்றிலும் விலகியிருக்கின்றது.

சீனா மீதான விரோத கொள்கையை மாற்றிக்கொள்ளாமல் தவறான பாதையில் தொடர்ந்து வேகமாக சென்றால் மோதல் ஏற்படுவது நிச்சயம். அமெரிக்காவின் இந்த



பொறுப்பற்ற செயல் இருநாட்டு மக்களின் அடிப்படை நலன்களையும், மனிதகுலத்தின் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்பதை அமெரிக்கா நினைவில் கொள்ள வேண்டும்.

தாய்வான் விவகாரத்தில் சீனாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை அமெரிக்கா அவமதிக்கின்றது.

தாய்வான் பிரச்னையில் அமெரிக்கா சிவப்பு கோட்டை தாண்டக்கூடாது. தைவானுக்கு ஆயுதங்களை விற்கும் அமெரிக்கா, சீனாவை ரஷ்யாவுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டாம் என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கின்றது-என்றார். (அ)

# ஜோர்ஜியா ஆர்ப்பாட்டத்தில் மோதல்!

ரிபிலிசி, மார்ச் 10

ஜோர்ஜியாவில் சர்ச்சைக்குரிய சட்டமூலத்துக்கு பாராளுமன்ற ஆதரவு வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மோதல் ஏற்பட்டுள்ளது.



பத்திரிகை சுதந்திரத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளை ஒடுக் கும் வகையில் இந் தச் சட்டமூலம் உள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தரப்பினர் குறிப்பிட்டனர்.

ஜோர்ஜியா பாராளுமன்றத்துக்கு வெளியே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன் அதனை கலைப்பதற்கு காவல்துறையினர் நீர்த்தாரைப் பிரயோகம் நடத்தியதுடன் கண்ணீர் புகை பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது 50க்கும் மேற்பட்ட காவல்துறையினரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், எதிர்க்கட்சி ஒன்றின் தலைவர் உட்பட 66 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)



## திருமண பந்தத்தில் இணைந்தார் ஹசரங்க

கொழும்பு, மார்ச் 10

இலங்கையின் பிரபல வீரர் வனிந்து ஹசரங்க திருமண வாழ்வில் இணைந்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வீரரான ஹசரங்கா 4 டெஸ்ட், 37 ஒருநாள், 55 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

ஐ. பி. எல். தொடரில் பெங்களூர் அணிக்காக விளையாடி வரும் அவர், கடந்த ஆண்டு 18 போட்டிகளில் 26 விக்கெட்கள் எடுத்து அசத்தினார்.

இந்நிலையில், ஹசரங்காவுக்கு திருமணம் நடைபெற்றுள்ளது. விந்தியாவுடனான அவருடைய திருமணத்துக்கு கிரிக்கெட் பிரபலங்களும் ரசிகர்களும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்கள். திருமணம் தொடர்பான புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

நியூசிலாந்தில் நடைபெற்றவுள்ள ஒருநாள் தொடரில் ஹசரங்கா அடுத்ததாக விளையாடவுள்ளார். (ஐ)

# நியூசிலாந்துடனான டெஸ்ட் இலங்கை சிறப்பான ஆட்டம்!

கிறிஸ்ட்சேர்ச், மார்ச் 10

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. இதில், முதல் நாள் ஆட்டம் முடிவில் இலங்கை அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 305 ஓட்டங்களை குவித்து சிறப்பான நிலையில் உள்ளது.

நியூசிலாந்து - இலங்கை அணிகள் மோதும் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு இலங்கை அணிக்கு இரு போட்டிகளில் வெற்றி அவசியமானது. எனினும், நேற்று ஆரம்பமான இந்திய - ஆஸி. டெஸ்ட் போட்டியும் இதில் தாக்கம் செலுத்தும் என்பது கவனத்துக்குரியது.

இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை அணி கிறிஸ்ட்சேர்ச்சில் நேற்று களமிறங்கியது. பிற்பகல் வேளை இரு தடவைகள் மழை குறுக்கிட்டதால் நேற்றைய நாளில் 75 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டன.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது இலங்கை.

7ஆவது ஓவரில் ஆரம்ப வீரர் ஒஷத பெர்னாண்டோ விக்கெட்டை பறிகொடுத்தார் அவர் 13 ஓட்டங்களைப் பெற்றார். எனினும், மற்றொரு தொடக்க வீரரும் அணித் தலைவருமான திமுத் கருணாரட்னவும் குசல் மெண்டிஸூம் சிறப்பாக ஆடினர்.

இருவரும் அரைச் சதங்களை கடந்தனர். இரண்டாவது விக்கெட்டுக்காக அவர்கள் 137 ஓட்டங்களை தமக்கிடையே பகிர்ந்து அணியை சிறப்பான நிலைக்கு அழைத்து சென்றனர். திமுத் 50 (7 பௌண்ட்ரிகளுடன்) ஓட்டங்களுடனும் மெண்டிஸ் 87 ஓட்டங்களுடனும் (16 பௌண்ட்ரிகளுடன்) அடுத்தடுத்து வெளியேறினர்.

அடுத்து வந்த அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் ஆகியோரும் நிதானம் காட்டினர். இதனால் விக்கெட் வீழ்ச்சி தடுக்கப்பட்டது. நான்காவது விக்கெட்டுக்காக இருவரும் 82 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றனர். தினேஷ் சந்திமால் 6 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

மறுபுறத்தில் தனஞ்சயவுடன் இணைந்து நிதானம் காட்டிய அஞ்சலோ மத்தியூஸ் 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 47 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்தார் நிரோஷன் திக்வெல்ல. அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் சொதப்பி வரும் அவர் இந்தப் போட்டியிலும் 7 ஓட்டங்களுடனேயே வெளியேறினார்.

எனினும், தனஞ்சய டி சில்வாவும் கசுன் ராஜித்தவும் திறமையாக துடுப்பெடுத்தாடி பிரிக்கப்படாத 7ஆவது விக்கெட்டில் 37 ஓட்டங்களை பகிர்ந்தனர். இதனால், இலங்கை அணி 300 ஓட்டங்களை




கடந்தது. நேற்றைய நாள் போதிய வெளிச்சமின்றி ஆட்டம் நிறுத்தப்பட்டபோது 75 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 305 ஓட்டங்களை இலங்கை பெற்றிருந்தது.

இதில், தனஞ்சய டி சில்வா 39 ஓட்டங்களுடனும் கசுன் ராஜித 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ரிம் சௌதி 44 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மற் ஹென்றி 65 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் மைக்கல் ப்ரேஸ்வெல் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும். (ஐ)

## இந்தியாவுடனான டெஸ்ட்
# கவாஜா அபார சதம் ஆஸி வலுவான நிலை

அஹமதாபாத், மார்ச் 10

உஸ்மான் கவாஜாவின் அபார சதம் மூலமாக அவுஸ்திரேலிய அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 255 ஓட்டங்களை குவித்துள்ளது.

போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. இந்தியாவில் நடக்கும் இந்தத் தொடரில் இந்திய அணி 2 போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு அவுஸ்திரேலிய அணி தகுதி பெற்றுவிட்ட நிலையில், இந்திய அணி தகுதி பெற இந்தப் போட்டி வெற்றி



அவசியமானது. இல்லையேல், இலங்கை - நியூசிலாந்து அணிகளின் டெஸ்ட் தொடரே அந்த அணியின் நுழைவை தீர்மானிப்பதாக அமையும்.

இந்த நிலையில், இறுதியும் தீர்க்கமானதுமான டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அந்த அணிக்கு ட்ராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா தொடக்கம் கொடுத்தனர். இருவரும் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். ஆனாலும் இந்த இணை அதிக நேரம் நீடிக்கவில்லை. 61 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது 32 ஓட்டங்களுடன் ட்ராவிஸ் ஹெட் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் கவாஜா நிலைக்க, அடுத்து வந்த லபுஷாக்னே 3 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதனால், ஆஸி அணி சற்று தடுமாறியது. எனினும், பின்னர் வந்த அணித் தலைவர் ஸ்ரீவன் ஸ்மித் வெகு நிதானமாக ஆடினார். 135 பந்துகளை சந்தித்த அவர் 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பீற்றர் ஹான்ஸ்கோம்ப் 17 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

நேற்று முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது, அவுஸ்திரேலிய அணி 90 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 255 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அபாரமாக ஆடிய கவாஜா தனது 14ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து 104 ஓட்டங்களுடனும், கமரூன் கிறீன் 49 ஓட்டங்களு டனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியாவின் பந்துவீச்சில் முஹமட் ஷமி 2 விக்கெட்களையும் அஸ்வின், ஜடேஜா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



## இந்தியா - ஆஸி. டெஸ்ட் போட்டியை இரு நாட்டு பிரதமர்களும் பார்த்தனர்!

அஹமதாபாத், மார்ச் 10

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையிலான 4ஆவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் தனது பெயரைக் கொண்ட விளையாட்டரங்கில் கிரிக்கெட்டை சித்திரிக்கும் வண்டியில் பார்வையாளர்களுக்கு கையசைத்தவாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடி சுற்றிவந்தார்.

அவருடன் அவுஸ்திரேலியா பிரதமர் அன்ரனி அல்போன்ஸ்/ம் கையசைத்தவாறு வண்டியில் மைதானத்தைச் சுற்றி சென்றபோது பார்வையார்கள் ஆரவாரம் செய்துதங்கள் கைகளை அசைத்து மகிழ்ச்சியை வெளியிட்டனர்.

இதன் பின்னர் இரண்டு நாடுகளினதும் பிரதமர்கள் பிரமுகர்களுக்கான பார்வையாளர்கூடத்திலிருந்து போட்டியைக் கண்டுகளித்தார்.

போட்டிக்கு முன்பதாக நடைபெற்ற எளிமையான ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அபான்ஸ் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை அங்கீகரித்து போட்டியை வைபவரீதியாக தொடக்கிவைத்தார்.

பிரதமர் மோடியுடன் எடுத்துக்கொண்ட சுயபடத்துடன் "கிரிக்கெட் மூலம் 75 வருட நட்பைக் கொண்டாடுகிறேன்" என்ற வாசகத்தை தனது ருவிற்றர் பக்கத்தில் அவுஸ்திரேலிய பிரதமர் அல்போன்ஸ் பதிவிட்டிருந்தார். (ஐ)

# தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு பொருத்தமான சூழல் இல்லை!

## ஆளும்கட்சிக் கூட்டத்தில் ரணில்



**கொழும்பு, மார்ச் 10**

**இந்த நேரத்தில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குப் பொருத்தமான சூழல் ஒன்று இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஆளும் கட்சிக் கூட்டத்தி லேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒன்றை நடத்துவதால் பெரிய மாற்றம் ஒன்று வந்துவி டப்போவதில்லை. நாங்கள் ரூபாவை மேலும் வலுவடையச் செய்யவேண்டியதே தற்போது முக்கிய விடயமாகும்.

இந்த நாட்டை மீளக் கட்டி யெழுப்புவதற்குக் குறைந்தது 4 வருடங்களாகும் எனப் பலர் கூறினார்கள். ஆனால், 8 மாதங் களில் நெருக்கடியைத் தீர்க்க முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இந்த மாதம் வழங்கப்ப டும். அதற்கமைய, எதிர்வரும் நாட்களில் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படும். நிவாரணம் வழங் கப்படும்.

ஏனைய கட்சியினர் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலைப் பயன் படுத்தி ஆட்சியைக் கைப்பற்று வதற்குத் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர்.

பந்து எங்கள் கைகளுக்குக் கிடைத்துள்ளது. அடித்து ஆடத் தயாராக இருங்கள்-என்றார். (அ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி; இரண்டு மாதங்களில் 24 பேர் சிக்கினர்

கொழும்பு, மார்ச் 10

வெளிநாடுகளில் தொழில் பெற்றுத்தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டமை உள் ளிட்ட சட்டவிரோத செயற்பா டுகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டு களின் கீழ் 24 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மற்றும் பெப் ரவரி மாதங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசாரணைப் பிரிவினால் முன் னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு களில் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவ்விரு மாதங்களிலும் சுமார் 173 முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட் டுள்ளதுடன், முறைப்பாட்டா ளர்களிடம் இருந்து அறவிடப் பட்டிருந்த பணம் 126 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமென வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணி யகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வ தற்காக சட்டவிரோத நிறுவ னங்கள் மற்றும் முகவர்களிடம் பணம் வழங்குவதை தவிர்க்கு மாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் பொதுமக் களிடம் கோரிக்கை விடுத்துள் ளது.

இவ்வாறான நபர்கள் தொடர் பில் 0112 864 241 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் களை வழங்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறி வுறுத்தியுள்ளது. (அ)

## மார்ச் 15 ஆம் திகதி வரை தொழிற்சங்க போராட்டம்!

கொழும்பு, மார்ச் 10

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை முதல் தொழிற் சங்க நடவடிக்கையை முன்னெ டுக்க தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மா னித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை இந்த தொடர் தொழிற் சங்க நடவடிக்கை முன்னெடுக் கப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையா ளர்கள், அரச வைத்திய அரிகா ரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழிற்சங்கங்களை சேர்ந்தவர் களே இவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத் துள்ளனர்.

அரசாங்கத்தின் வரிக்கொள் கைக்கு எதிராக இந்த தொழிற் சங்க நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தொழிற்சங்க நடவடிக்கை கார ணமாக பல சேவைகள் ஸ்தம் பிப்பதால் நாடு முடங்கும் சாத் தியம் காணப்படுவதாக எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## 'இடம்பெயர்ந்த நுழைவிடங்கள்' நூலறிமுகமும், கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையின் ஏற்பாட்டில் கொழும்பு கட்புல ஆற்றுகைக் கலை கள் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்த ரும் பேராசிரியருமான சரத் சந்திரஜீவவின் 'இடம் பெயர்ந்த நுழைவிடங்கள்' என்னும் கவிதைத் தொகுப்புக் குறித்த அறிமுகமும் கலந்துரையாட லும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு இல.128 , டேவிற் வீதி, யாழ்ப்பா ணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன் தலை மையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் நூல் குறித்த உரைகளை கவிஞரும் அரசியல் விமர்சகருமான ம.நிலாந்தன், யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள் ளது. (அ)

## 'ஓர் ஆரோக்கியமான வீடு' அறிமுகம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, மார்ச் 10

தேசிய உற்பத்தித்திறன் செய லகத்தால் நடைமுறைப்படுத் தப்படும் "ஓர் ஆரோக்கியமான வீடு : சமூக உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு" எனும் திட்டத்தின் அறிமுகக் கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செய லாளர் திருமதி ரூபவதி கேதீஸ் வரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத் தில் நேற்று முன் தினம் நடை பெற்றது.

இதன்போது உற்பத்தித் திறன் பிரிவின் மாவட்ட இணைப்பாள ரால் குறித்த திட்டம் தொடர் பாக விளக்கமளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவு களிலும் குறித்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் வழி வகைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதற்காக 1,920 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் கருத்துரைக்கையில்- உற்பத்தித் திறன் செயற்பாடுகள் இதுவரை காலமும் அலுவலக மட்டங்க ளில் பரவலாக முன்னெடுக்கப் பட்டிருந்தன. அடுத்துவரும் காலங்களில் பொதுமக்கள் தமது வீடுகளிலும் உற்பத்தித் திறன் செயற்பாடுகளை முன் னெடுத்துச் செல்வதற்கு இச்செ யற்றிட்டம் வழி வகுக்கிறது.

எனவே, இதனூடாக உற்பத் தித் திறன் செயல் பாடுகள் மற் றும் நன்மைகள் சாதாரண பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டும். அதனூடாக அவர் கள் உச்ச பயனை பெறவேண் டும்.

இதற்காக குறித்த செயற்திட் டத்துடன் தொடர்புடைய உத் தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண் டும்-என்றார். (அ)

## கியூ.ஆர் முறையில் மாற்றம்

கொழும்பு, மார்ச் 10

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் நள்ளிர வில் கியூ.ஆர் முறை புதுப்பிக் கப்படும் என அமைச்சர் காஞ் சன விஜேசேகர தெரிவித்தார்.

முன்னதாக கியூ.ஆர் ஒதுக் கீடு ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் புதுப்பிக்கப்பட்டு வந்த நிலை யில் இந்த மாற்றம் வந்துள்ளது.

இதற்கிடையில், கியூ.ஆர் முறை மூலம் வாரத்துக்கு பெறப்படும் எரிபொருளின் அளவுகளில் எந்த மாற்றமும் இருக்காது என்றும் அமைச்சர் கூறினார்.

வார இறுதி நாட்களிலும் இலங்கைப் பெற்றோலிய கூட் டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனை யம் செயல்பட ஏற்பட்டதன் காரணமாக விநியோகச் செல வைக் குறைக்க இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை உயரலாம்!

கொழும்பு, மார்ச் 10

இலங்கையில் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எதிர்காலத்தில் வேகமாக அதிக ரிக்கக்கூடும் என சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் பதிவாகும் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயாளர்களின் எண்ணிக் கையை கருத்தில் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (அ)

## துப்பாக்கி திருடிய பிக்கு சிக்கினார்!

கொழும்பு, மார்ச் 10

பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவத் திரை ஏமாற்றி ரி-56 ரக துப்பாக்கி, அதற்கு பயன் படுத்தப்படும் தோட்டாக்கள் மற்றும் மகசின் ஆகியவற்றை திருடினர் என்ற குற்றச்சாட்டின்க கீழ், பௌத்த பிக்கும் மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டனர்.

பனாகொடை இராணுவ முகாமை அண்டிய சோதனைச் சாவடியில் இருந்து ரி-56 துப்பாக்கி திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் கள் என்ற சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய் வுத் திணைக்கள அதிகாரிகளால் இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர் ஹோமாகம, கொடகம பிரதேசத்தில் உள்ள விஹாரை ஒன்றில் தங்கியிருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பனாகொடை இராணுவ முகாமை அண்டிய இராணுவ குடியிருப்பு வளாகத்தின் பாதுகாப்புக் காக நியமிக்கப்பட்ட இராணுவ சிப்பாயை ஏமாற்றி கடந்த 3 ஆம் திகதி இரவு அவரிடம் இருந்து ரி-56 துப்பாக்கி, 4 மகசின்கள், 120 தோட்டாக்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஒரு பக்க சாலையில் உள்ள ஒரு கற்குகையின் கீழ் 30 திருடப்பட்ட தோட்டாக்கள் அடங்கிய ஒரு மகசினை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

அதன்பின்னர் அருகில் உள்ள கடையொன்றில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெரா மூலம் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டு மேலதிக விசாரணை களுக்காக பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

## உருளைக் கிழங்கு வரி அதிகரிப்பு

கொழும்பு, மார்ச்

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் குறித்த வரி அதிகரிக்கப்பட்டுள் ளது.

இதன்படி, இறக்குமதி செய் யப்படும் ஒரு கிலோகிராம் உரு ளைக்கிழங்குக்கான விசேட பண்ட வரியை 20 ரூபாவில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்க



தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## ஜனநாயகம்...

அத்துடன், அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மீதான 'வலிந்த நடவடிக்கைகள்' தொடர்பில் எமது கரிசனைகள் இன்னமும் தொடர்கின்றன. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும் கருத்துகளை வெளியிடுவதற்கான உரிமையையும் இலங்கை பாதுகாக்க வேண்டியது அவசியம் என்றும் அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச மனித உரிமைகள் தொடரபான 6ஆவது மீளாய்வு கூட்டம் நடக்கிறது. இதில், மனித உரிமைகள் பேரவையின் 52ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு இணை அனுசரணை வழங்கிய நாடுகளான கனடா, மாலாவி, மொன்டினீக்ரோ, வட மசிடோனியா, பிரிட்டன் ஆகியவை சார்பில் பிரிட்டனின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சிமொன் மான்லி உரையாற்றினார். அவரின் உரையிலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

மேலும், பல்வேறுபட்ட இன, மதக் குழுக்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினரதும் மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் அவற்றுக்கு மதிப்பளிப்பதிலும் அண்மைக்காலங்களில் இலங்கை வெளிப்படுத்திய கடப்பாட்டை வரவேற்கின்றோம். அரசமைப்பு மறுசீரமைப்புடன் தொடர்புடைய அண்மைக்கால முயற்சிகள், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய அரசியல் செயன்முறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் என்பன அதற்குரிய அடிப்படையை வழங்கியிருக்கின்றது.

இதேபோன்று, கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உலகளாவிய காலாந்தர மீளாய்வு செயன்முறையில் இலங்கையின் நேர்மறையான ஒத்துழைப்பையும் நாம் வரவேற்கின்றோம். அந்த மீளாய்வில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்துவதில் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருக்கின்றோம்.

எது எப்படியிருப்பினும், அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மீதான 'வலிந்த நடவடிக்கைகள்' குறித்த எமது கரிசனைகள் இன்னமும் தொடர்கின்றன. அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தையும், கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமையையும் இலங்கை பாதுகாக்கவேண்டியது அவசியமாகும்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை ஊக்குவிப்பதில் சிவில் சமூக அமைப்புகள் முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கும் அதேவேளை, சிவில் சமூக அமைப்புக்களின் முக்கிய செயல்பாடுகளுக்கான இடைவெளி உறுதிப்படுத்தப்படவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றோம்.

மேலும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் முக்கிய நிறுவனங்கள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துதல் உள்ளடங்கலாக ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறோம். இதில் இலங்கை தொடர்பில் நம்பிக்கையைப் பேண உதவும் தேர்தல் கட்டமைப்பும் உள்ளடங்குகின்றது.

அடுத்ததாக நாட்டில் நீண்டகாலமாகத் தொடரும் ஊழல்மோசடிகள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு என்பன தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்தோடு, நாட்டு மக்களின் சுபீட்சத்துக்கு பங்களிப்பு செய்யக்கூடிய சிறந்த ஆட்சிநிர்வாகம் மற்றும் சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் என்பனவும் இன்றியமையாதவையாகும்.

தவிர, சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறான சட்டமொன்றின் மூலம் பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யவேண்டும் என்றும் வலி யுறுத்தப்பட்டது. (ஐ)

## ரூபாயின்...

ரூபாயின் மதிப்பு 23 வீதத்தால் குறையும் என்று பிற்ச் பினான்சியல் சொலுசன்ஸ் அமைப்பை மேற்கோள் காட்டி ப்ளூம்பெர்க் இணையதளம் தெரிவித்துள்ளது. பிற்ச் பினான்சியல் சொலுசன்ஸின் இடர் ஆய்வாளர் செவாங்டின் கூறுகையில், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் தொகைக்கு இலங்கை அதன் இயக்குநர்கள் குழுவின் ஒப்புதலை பெற்றாலும், நிதி திட்டத் திற்கு இணங்குவது கடினமான சவாலாக இருக்கும்.

வெளிநாட்டுக் கடனை அடைப்பதற்காக கையிருப்பு அதிகரிக்க வேண்டிய அவசியம், பலவீனமான பொருளாதாரம் மற்றும் எதிர்வரும் தேர்தல்கள் இதற்கு தடையாக இருக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, இந்த வருட இறுதிக்குள் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 390 ரூபாயாக வீழ்ச்சியடையலாம் என்றும் கூறினார். (ஐ)

## டிப்பர்...

டிப்பர் மோதித் தள்ளியது. இதில், அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். விபத்துக் குறித்து அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## புதிய...

நான் தயாராக உள்ளேன் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

புதிய சிறீ லங்கா சுதந்திர கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

எனது ஆட்சி காலத்தில் ஆகக் கூடியது நூற்றுக்கு ஒரு சதவீத வட்டி அடிப்படையில் மாத்திரமே கடன் பெறப்பட்டது. ஆனால், ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் சீனாவிடமிருந்து 9 சதவீத வட்டிக்கு கடன் பெறப்பட்டது. மோசடி செய்வதற்காகவே அவர்கள் இவ்வாறு கடன் பெற்றனர். இவ்வாறு இவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை செலுத்த முடியாமல் இன்று நாம் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கின்றோம்.

இறுதியில் அரசாங்கமே தம்மை வங்குரோத்தடைந்த நாடாக பிரகடனப்படுத்தியுள்ளது. உலகில் தாம் வங்குரோத்தடைந்துள்ளதாக அறிவித்துள்ள மிகக்குறைவான நாடுகளில் இலங்கையும் ஒரு நாடாக இடம்பிடித்துள்ளது.

வெற்றிகரமாக பெற்றுக் கொண்ட அனைத்தையும் இன்று இழந்திருக்கின்றோம். இவற்றை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறன்றி மீண்டும் ராஜபக்ஷக்கள் கலத்தில் ஏற்கனவே ஒரு யுத்தத்தை வெற்றி கொண்டுள்ளோம். மீண்டுமொரு யுத்தத்தை வெற்றி கொள்வோம் எனக் கூறுவார்கள்.

அதனை நம்பி ஏமாந்து விடக் கூடாது. நாட்டின் இன்றைய நிலைமைக்கு குறிப்பாக மக்கள் பொறுப்பு கூற வேண்டும். இதில் பிரதானமாக தவறிழைத்தவர்கள் பொது மக்களாவர். சரியாக ஆராய்ந்து பார்க்காமல் 69 இலட்சம் வாக்குகளை வாரி வழங்கியுள்ளனர்.

இந்த வீழ்ச்சியை முற்றாக சரி செய்வதற்கு 25 - 30 ஆண்டுகளாவது செல்லும். எனவே, குறைந்தபட்சம் இப்போ திருந்தாவது நாட்டைக் கட்டியெழுப்பும் செயல்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்.

கட்சி , இன , மத பேதமின்றி அனைவரையும் ஒன்றிணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம். அதற்கு தலைமைத்துவம் வகிக்கவும் , வழிகாட்டவும் , ஆலோசனைகளை வழங்கவும் நான் தயாராகவுள்ளேன்.

எனவே தேர்தல் காலத்தில் தெரிவிக்கப்படும் பொய்களை நம்பி மக்கள் ஏமாந்து விடக்கூடாது. வாக்கு கேட்பவர்கள் கூறும் வாக்குறுதிகளை நன்று ஆராய்ந்து , அவர்களால் அவற்றை நிறைவேற்ற முடியுமா? , அதற்கு அவர்கள் தகுதியானவர்களா என்பதை நன்கு அறிந்து சிந்தித்து வாக்களிக்குமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ஐ)

## மீண்டும்...

"தேர்தலை நடத்தாமல் ஜனநாயகத்தை குழித்தோண்டி புதைத்து இராணுவம் மற்றும் பொலிஸ் பலத்தால் நாட்டை ஆளுகின்ற ஒரு யுகத்துக்கு மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதி வந்துள்ளார்.

இன்றைய நிலையில் மக்களின் ஜனநாயகமும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதால் ஆளுங்கட்சிகளுக்கு என்ன நடந்தது என்பதை வரலாறு கூறும். - என்றார். (அ)

## காணாமல்...

அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால், "போராட்டக் கொட்டகைக்கு இலங்கை மின்சார சபையே மின் இணைப்பு தந்தது. ஏற்படும் பழுதுகளையும் மின்சார சபை ஊழியர்களே திருத்துவது வழமை. மின்சாரத்தை நாம் சட்ட விரோதமாக பெறவில்லை.", என்று காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ. ராஜ்குமார் தெரிவித்துள்ளார். (ஐ-07)

## 15ஆம் திகதி...

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் என்பவை நேற்று முன்தினம் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுடன் விசேட பேச்சை முன்னெடுத்திருந்தன.

இதன்போது பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளுக்கான கொடுப்பனவை 3 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடளாவிய ரீதியிலுள்ள சகல ஆசிரியர் சங்கங்களும் 15ஆம் திகதி அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

விடைத்தாள் திருத்தும் பணிகள் தாமதமடைந்தால் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தாமதம் ஏற்படும். எனவே, இன்றைய தினத்திற்குள் (நேற்றைக்குள்) இதற்கான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் அந்த தொழில்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்தன. (ஐ)

## போர்...

அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சித்திரவதைகளுக்கு உள்ளானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தங்களை போன்ற சர்வதேச அரச சார்பற்ற மனித உரிமைகள் அமைப்புகளுக்கு மிகுந்த கவலையளிக்கின்றன என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

2016 நவம்பர் 7ஆம் திகதி முதல் 2017 ஜூலை 27 ஆம் திகதி வரை குலதுங்க ஜோசப் முகாம் ( SFHQ-W) தளபதியாக இருந்தார். இந்த காலகட்டத்தில் ஜோசப் முகாமில் சித்திரவதைகளுக்கு ஆளான பலர் பிரித்தானியா மற்றும் உலகம் முழுவதும் வாழ்கின்றனர். சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஐ. சி. பி. பி. ஜி., குலதுங்கவின் பங்கேற்பை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கிறது.

2016 இல் குலதுங்கவின் முன்னோடியான சிசிர மென்டிஸ் சித்திரவதைக்கு எதிரான ஐ. நா. குழுவுக்கு அனுப்பப்பட்டபோது பெலிஸ் கெயர் செய்ததைப் போல குறைந்தது அவரின் பங்குபற்றல் தொடர்பில் அவரிடம் வினா எழுப்புமாறு ஐ. நா. மனித உரிமைகள் குழுவை கோரியதுடன், முன்னாள், தற்போதைய மற்றும் எதிர்கால குற்றவாளிகளுக்கு ஒரு தீவிரமான செய்தியை அனுப்புமாறும் கோரியுள்ளது. (ஐ)

## 13 ஆவது...

திருமண வயது 18 எனில் தெற்கிலும் அதே நடைமுறையே காணப்படும்.

இதுவே ஒரே நாட்டில் ஒரே நீதியாக அமைகின்றது.

எனினும் சமஷ்டி கட்டமைப்பு காணப்படும் நாட்டில் உதாரணமாக எமது நாட்டில் 9 மாகாணங்கள் காணப்படுமாயின் 9 மாகாணங்களுக்கும் 9 சட்டங்கள் காணப்படும்.

14 வயதில் யுவதி திருமணம் செய்யலாம் என்ற நீதியை கிழக்கு மாகாண சபையினூடாக கொண்டுவரக்கூடும்.

பாரயளவிலான நிலப்பரப்பை கொண்ட நாடுகளிலேயே சமஷ்டி கட்டமைப்பு காணப்படுகின்றது. ஏனெனில் குறித்த நாடுகளில் மத்திய அரசாங்கத்தினால் சகல பகுதிகளையும் நிர்வகிப்பது என்பது அவ்வளவு இலகுவான விடயமல்ல. எம்மை போன்ற நாடுகளில் நாட்டை பிரிப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவே சமஷ்டி என்ற நிலைமைக்கு செல்ல வேண்டும்.

பல வருடங்களாக ஒரே நாடாகக் காணப்பட்ட எமது நாடு 13ஆவது திருத்தத்தினூடாகவே 09 மாகாணங்களாக பிரிந்தது. இந்தக் கோரிக்கை நாம் முன்வைத்த கோரிக்கை அல்ல. எமது மக்கள் முன்வைத்த கோரிக்கையும் அல்ல. தமிழ் மக்கள் முன்வைத்த கோரிக்கையும் அல்ல. இந்தியாவினால் பலவந்தமாக எமது நாட்டுக்கு வழங்கப்பட்டதே 13ஆவது திருத்தமாகும். அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது" - என்றார். (அ)

## தொழில்சங்க...

தெரிவித்து 40 தொழில்சங்கங்களை கொண்ட கூட்டமைப்பு ஒரு வார கால பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது. இந்தப் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

நேற்றைய தினம் மருத்துவர்கள், தாதியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதேபோன்று, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனைவரும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, ஆசிரியர் சங்கங்கள், புகையிரத தொழில்சங்கங்கள் வரும் புதன்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவள்ளன. (ஐ)

## மக்களின்...

பத்தில் மாகாண சபைகள் செயற் படாத சூழ்நிலையில் அதனையும் நிறைவேற்றுத்துறையின் கைப்பிடிக்குள் உட்படுத்தியிருப்பதனூடாக நாட்டின் ஜனநாயக முறைமையை சீரழிப்பதாகவே நாம் காணுகின்றோம்.

உள்ளூராட்சி மன்றங்களில் எவ்வாறான சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதை நாம் யாவரும் அறிவோம். பிறப்பு முதல் இறப்புவரை உள்ளூராட்சிமன்றங்கள் இந்த நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டில் பாரிய பங்களிப்புகளை செய்கின்றன.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறையே உள்ளூராட்சி மன்றங்கள் தாபிக்கப்படுகின்றன. அரசியலமைப்பின்படி அதிகாரங்களை கொண்டதாக ஐந்து வருடங்கள் என்ற முறையில் இன்னும் ஒரு வருடத்தை உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாட்டுக்காக நீடிக்கலாம்.

எனினும் சர்வஜன வாக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்ட ஏற்பாடுகளின் அடிப்படையில், அதனையும் தாண்டியதாக உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலத்தை நீடிக்க முடியாது. இந்த அரசாங்கமானது உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தமால் இருப்ப தற்கே முயற்சிக்கின்றது.

அதற்காக பல்வேறு காரணிகளை முன்வைக்கின்றது. பணம் இல்லை என்று கூறுகின்றது. ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபாயை தேர்தலுக்காக ஒதுக்கியுள்ளது" - என்றார்.(அ-கே)

ஈழநாடு
Eelanadu

# வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு தேவையான நிதி தாருங்கள்!

## நிதி அமைச்சின் செயலருக்கு அரச அச்சக அதிகாரி கடிதம்

கொழும்பு, மார்ச் 10

**வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குத் தேவையான பணத்தை வழங்குமாறு கோரி நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு அரச அச்சக அதிகாரி கங்கானி லியனகே கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.**

இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை அல்லது கூடுதல் தொகையை வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு விடுவிக்கவேண்டும் என அவர் இதன்போது கோரிக்கை விடுத் துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன் காரணமாக உடனடியாக வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட வேண்டியுள்ளன என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தலுக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவுக்கும் அரச அச்சகர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

வாக்குச் சீட்டு அச்சடிக்கும் காலத்தில் பகலில் 35 பொலிஸ் அதிகாரிகளும் இரவில் 28 பொலிஸ் அதிகாரிகளும் தேவைப்படுவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் சேவையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என, அரச அச்சக அதிகாரி அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறைப்பு

கொழும்பு, மார்ச் 10

நேற்று வியாழக்கிழமை முதல் 7 வகையான அத்தியாவசிய பொருட்களின் விலையைக் குறைக்க லங்கா சதொச நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறைக்கப்பட்ட பொருட்களின் புதிய விலைகள் பின்வருமாறு:-

காய்ந்த மிளகாய் ஒரு கிலோ 1,500 ரூபாய்
கோதுமை மா ஒரு கிலோ 230 ரூபாய்
பருப்பு ஒரு கிலோ 339 ரூபாய்
வெள்ளைச் சீனி ஒரு கிலோ 218 ரூபாய்
வெள்ளை பச்சை அரிசி ஒரு கிலோ 155 ரூபாய்
வெள்ளை நாடு ஒரு கிலோ 188 ரூபாய்
பெரிய வெங்காயம் ஒரு கிலோ 129 ரூபாய். (அ)

## காட்டுப் பகுதியில் இருந்து முன்னாள் போராளி மீட்பு



மட்டக்களப்பு, மார்ச் 10

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளில் ஒருவர், நடு காட்டில் இருந்து சடை முடியுடன் மீடக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிப்பளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட தாந்தாமலைக் காட்டுப் பகுயிலிருந்து முன்னாள் போராளி ஒருவர் மீட்கப்பட்டு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.


கடந்த 4 வருடங்களாக குடும்பத்தினரால் கைவிடப்பட்ட, முன்னாள் போராளியான மனநலம் குன்றிய பாலா என்பவர் தாந்தாமலைப் பகுதியில் அமைந்துள்ள றெட்பாணா எனும் கிராமத்திற்கு அப்பாலுள்ள காட்டுப்பகுதியில் தூர்ந்துபோன கொட்டகை ஒன்றில் வசித்து வந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவலறிந்த ஜனநாயகப் போராளிகள் கட்சியினர், மற்றும் அவரது சக முன்னாள் போராளிகளும் அவரை அணுகியுள்ளனர். இவர்களைக் கண்டதும் பாலா காட்டுப் பகுதிக்குள் மறைந்து விடுவார். பின்னர் அவரை தொடர்ந்து இரவு பகலாக அவதானிந்து வந்துள்ளனர்.

அவரது உறவினர்கள் மற்றும் அப்பகுதி கிராம சேவகர் ஆகியோரது உதவியுடன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உதவியுடன், உரிய இடத்திற்கே அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதுவரை காலமும் காட்டிலுள்ள பழங்களை உண்டு கொண்டு, குளிக்காமல், முடிவெட்டாமல், சுகாதார சீர்கேடான முறையில் அவர் வாழ்ந்து வந்துள்ளார். நாம் அவருக்கு புதிக ஆடைகளை மாற்றி வைத்தியசாலையிலிருந்து அவரைக் கவனித்துக் கொள்வதற்காகவும், மேலும் ஒருவரையும் அனுப்பி வைத்துள்ளோம் என ஜனநாயக் போராளிகள் கட்சியைச் சேர்ந்த நகுலேஸ் தெரிவித்தார். (அ)

## காணவில்லை



அராலி வடக்கு குலனையை வதிவிடமாக கொண்ட **கபிலன் (வயது 64)** என்பவரை கடந்த சில நாட்களாக காணவில்லை. இவரை எங்கேனும் கண்டாலோ அல்லது இவர் பற்றி ஏதும் தகவல் கிடைத்தாலோ உடன் தெரியப்படுத்தவும்.

தொடர்புகளுக்கு : **TP-754743983**

## உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியிடுவதில்காலதாமதம்

கொழும்பு, மார்ச் 10

2022 ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை பெறுபேறு களை வெளியிடுவதில் காலத்தாமதம் ஏற்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றிய போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனை தெரிவித்தார்.

ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்படும் தொழிற் சங்க நடவடிக்கை காரணமாக விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் காலத்தாமதத்துடன் இடம்பெறுகின்றன.

இதனாலேயே பெறுபேறுகளை உரிய திகதியில் வெளியிட முடியாத நிலை காணப்படுவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அத்துடன் ஆசியரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படு மாயின் 2023 ஆம் கல்வியாண்டுக் கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான திகதியில் மாற்றத்தை ஏற்படுத்த நேரிடும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள் திருத்தும் பணிகளுக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை அமைச்சரவை அங்கீகாரத்துடன் அதிகரித்துள்ளபோதிலும், அதிகரிக்கப்பட்ட தொகையானது பற்றாக்குறையாக காணப்படுவதாக ஆசிரியர்கள் தெரிவித்து வருகின்றனர். (அ)

## பஸ்ஸில் இளைஞன் மீது கத்திக்குத்து!

கொழும்பு, மார்ச் 10

தனியார் பயணிகள் பேருந்தில் சென்ற இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்த சம்பவம் பிலியந்தலை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

பிலியந்தலையில் இருந்து கஹபொல நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் பயணிகளின் பணப்பை யொன்றை இருவர் இணைந்து திருட முற்பட்ட நிலையில் அதனை அவதானித்த நடத்துநர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

விசாரணையில், வாக்குவாதம் முற்றி, சந்தேகநபர்களில் ஒருவர் மறைத்து வைத்திருந்த கத்தியால் நடத்துநரை தாக்க முயற்சித்துள்ளார்.

இதன்போது நடத்துநருக்கு உதவிக்கு வந்த இளைஞர் ஒருவர் மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த பஸ்ஸில் இருந்த மற்ற பயணிகள், சந்தேக நபர்கள் இருவர் மீதும் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் தப்பியோடியுள்ளார். மற்றைய சந்தேக நபரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.


பிலியந்தலை மடபாத பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

தப்பியோடிய சந்தேக நபரை கைது செய்ய விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவோம்

### உலக வங்கி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 10



இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை யின் முன்னேற்றத்தை வரவேற்பதாகவும் அதற்காக தாம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

தமது உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பதிவிலேயே உலக வங்கியின் பிரதித் தலைவர் மார்ட்டின் ரைசர் இத னைத் தெரிவித்தார்.

மக்களை பாதுகாப்பதற்கும் பொருளாதாரத்தை மீட்பதற்குமான முக்கிய சீர்திருத்தங்களைச் செயற்படுத்த தாம் தொடர்ந்தும் ஆதரவளிப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## 6 இலங்கையர்கள் தமிழகத்தில் கைது!

### நியூசிலாந்து செல்ல முயன்றவேளை

சென்னை, மார்ச் 10

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக நியூசிலாந்து செல்ல முற்பட்ட 6 இலங்கையர்கள் தமிழ்நாடு கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த 6 பேரும் நியூசிலாந்துக்கு படகு வழியாக தப்பி செல்ல முயன்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழ் நாட்டில் உள்ள கியூ பிரிவின் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய, குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த 6 பேரும் தமிழ்நாட்டில் படகு உரிமையாளர் ஒருவரிடம் பணம் செலுத்தி படகு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## தொடர்ந்து உயர்கிறது ரூபாவின் பெறுமதி

கொழும்பு, மார்ச் 10

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதத்தின் பிரகாரம், அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் வலுவடைந்தது.

கடந்த நான்கு (வணிக) தினங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி, தொடர்ந்தும் அதிகரித்து வந்துள்ளதை காணமுடிகிறது.

அதன்படி, நேற்றைய நாணய மாற்று விகிதத்துக்கமைய, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 307 ரூபா 36 சதமாகவும், விற்பனை விலை 325 ரூபா 52 சதமாகவும் பதிவாகியுள்ளது.

நேற்று முன் தினம் நாணய மாற்று விகிதத்தின்படி, அமெரிக்க டொலரொன்றின் கொள்முதல் பெறுமதி 313 ரூபா 77 சதமாகவும், விற்பனை பெறுமதி 331.05 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.